உலக வரலாற்றில் முதன்முறையாக e-mail இல் வெளிவரும் இதழ்

e-magazine
www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-7 இதழ்-183

செப்டம்பர் 1-16 2024



ஏணியில் 27 நட்சத்திரங்களுடன் காட்சிதரும் காளஹஸ்தி சிவன்

e-magazine
e-magazine
e-magazine
e-magazine

## விநாயகரின் புகழ்பாடும் நூல்கள்

## 32 விநாயகர்களின் சிறப்புகள்

# பயம் போக்கும் வீரபத்திரருக்கு இரவு பூஜை நடைபெறும் கோவில்

சிவனின் அக்னியில் இருந்து தோன்றிய வராக கருதப்படுபவரே அகோர வீரபத்ர சுவாமி. இவரை அக்னி வீரபத்திரர் என்றும் அழைப்பர். மேலும் இவர் சிவனின் மைந்தனாகவும் கருதப்படுகிறார். சிவனின் ஆணைக்கிணங்க தன்னை நாடி வரும் பக்தர்களுக்கு நன்மை செய் வதற்காகவே பூலோகத்தில் வீற்றிருக்கிறார்.

தேவையற்ற பயம், கவலை கொள்பவர்கள் தொடர்ந்து வீரபத்திரரை வழிபட்டு வந்தால் மேற்கண்ட பயம் விலகிவிடும், வீரபத்திரரை வழிபடுவதால் நம்மிடம் இருக்கக்கூடிய அனைத்து விதமான தீய சக்திகளையும் அவர் அகற்றுவார்.

பயத்தை நீக்கி தன்னம்பிக் கையை ஏற்படுத்துவார். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் அனைத் தையும் நீக்குவார். காரணமே இன்றி கஷ்டப்படுபவர்களின் கஷ்டங்களையும், துயரங்களையும் தீர்த்து வைப்பார். வாழ்க்கையில் முன்னேற நல்ல வழி காட்டுவார். தீராத கடனையும் தீர்த்து வைப்பார். எதிர்மறை சக்திகளால் ஏற்பட்ட துயரங்களில் இருந்து நம்மை காப்பாற்றுவார்.

அவரை வணங்கினால் எந்த விதமான எதிர்மறை சக்திகளும் நம்மை அண்டாது என்பதே உண்மை.



வீரபத்திரரை ஞாயிற்றுக்கிழமையிலும், செவ் வாய்க்கிழமையிலும் வழிபடலாம். மேலும் பௌர்ணமி தினத்தில் வழிபடுவது மிகவும் சிறப்புக்குரியது. இவருக்கு மிகவும் பிடித்த நிறமாக கருதப்படுவது தூய்மையான வெள்ளை நிறம். திருவெண்காடு ஸ்வேதாரண்யேஸ்வரர் கோவிலை ஆதி சிதம்பரம் என்று அழைப்பார்கள், இக்கோவில்தான் சிவபெருமான் முதல் நடனம் ஆடியதாக கருதப்படுவதால் இதை ஆதி சிதம்பரம் என்று அழைப்பார்கள்.

இக்கோயிலில் ஞாயிற்றுக் கிழமை இரவுகளில் அகோர மூர்த்தியை (வீரபத்ரர்) வழி படுவது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். வேறு எந்த சிவன் கோவிலிலும் இரவு நேரத்தில் வீரபத்திரருக்கு சிறப்பு பூஜைகள் நடை பெறுவது கிடையாது ஆதி சிதம்பரத்தில் மட்டும் இரவில்வீரபத்திரருக்கு சிறப்பு பூஜைகள் நடைபெறுகிறது.

வாழ்வில் அதிகம் பயம் கொள் ளும் மனோபாவம் உள்ளவர்கள் இத்தல வீரபத்திரரை வழிபட்டால் பலன் மிகுதியாக கிடைக்கும்.

# “மங்களம் தரும் திருமங்கலக்குடி”

நவக்கிரகங்களுக்கு ஏற்பட்ட தோஷத்தை நீக்கியவர் கும்பகோணத்தை அடுத்துள்ள ஆடுதுறையில் அமைந்துள்ள “திருமங்கலக்குடி பிராணவரதேஸ்வரர்”. முதலாம் குலோத்துங்க சோழனின் தவறால் உயிரிழந்த மந்திரியை உயிர்ப்பித்தாள் இத் தல நாயகி. இதனால் இவள் “மங்களாம்பிகை” எனவும், பிராணனை திரும்ப கொடுத்ததால் இறைவன் “பிராண வரதேஸ்வரர்” எனவும் வழிபடலாயினர். மாங்கல்ய தோஷத்தால் திருமண தடை உள்ளவர்கள் இத்தல நாயகியை வழிபட திரு மணத் தடை நீங்கும். வழிபடும் பெண்களின் மாங்கல்ய பலம் பெருகும். இத் தலத்தின் பெயர் மங்களக்குடி, தல விநாயகர் மங்கள விநாயகர். அம்பாள் மங்களாம்பிகை. தீர்த்தம் மங்கள தீர்த்தம். விமானம் மங்கள விமானம். எனவே, இத் தலம் “பஞ்ச மங்கள ஷேத்திரம்” எனப்படுகிறது.

அட்டையில்: நொய்டா செக்டர் 62, ஸ்ரீ விநாயகா ஸ்ரீ கார்த்திகேயா கோவிலில் அருள் பாலிக்கும் ஸ்ரீ விநாயகர்

e-magazine
aanmeegamalar.com

# தீராத பிரச்சனை தீர்க்கும் திருபுவனம் சரபேஸ்வரர்

கும்பகோணத்திலிருந்து சுமார் 7 கி.மீ. தொலைவில், மயிலாடுதுறை வழித் தடத்தில் அமைந்துள்ளது "திருபுவனம்" இங்கு தனி சந்நதியில் வீற்றிருக்கும் "சரபேஸ்வரரை" 11 வாரம், 11 விளக்கு ஏற்றி, 11 சுற்று சுற்றிவந்து வழிபாடு செய்தால், சங்கடங்கள் அனைத்தும் தீரும், தீராத கடன் தொல்லைகள் தீரும், பில்லி, சூனியம், ஏவல் போன்றவற்றிலிருந்து விடுபடலாம், வழக்குகளில் வெற்றி பெறலாம், இக்கோவிலில் ஞாயிற்று கிழமைகளின் ராகு கால வேளை சரபர் வழிபாட்டிற்கு மிகச் சிறந்த நேரமாகும்.



# பிறவிக் கடன்களை தீர்த்துவைக்கும் ரிண விமோஷன லிங்கேஸ்வரர்

முற்பிறவி தீவினைகள் நீங்கவும், இப்பிறவியின் கடன்கள் தீரவும், வறுமை நீங்கி சுபிட்சமான வாழ்க்கை கிடைத்திடவும் வணங்க வேண்டிய இறைவன், திருச்சேறையில் செந்நெறியப்பர் ஆலயத்தில், தனி சந்நதி வீற்றிருக்கும் "ரிண விமோஷன லிங்கேஸ்வரர்".

கும்பகோணம் திருவாரூர் சாலையில் கும்பகோணத்தில் இருந்து சுமார் 15 கி.மீ. தொலைவில் உள்ளது இத்தலம். ரிண விமோஷனரை 11 திங்கட்கிழமைகள் அபிஷேக, ஆராதனை செய்து வழிபட்டு, பின்னர் மகாலஷ்மியையும், ஜேஷ்டா தேவியையும், பைரவரையும் வணங்கினால் வழிபடுபவரது வறுமையும், கடன்களும் தீரும்.

ஒருவர் முற்பிறவிகளில் செய்த பாவங்கள் அனைத்தும் அடுத்தடுத்த பிறவிகளில் தொடர்கிறது. முன்வினைப் பயன்கள் அனைத்தும் பிறவிக் கடன்களாகின்றன. இந்த கடன்களை தீர்த்து வைக்கிறார் ரிண விமோஷன லிங்கேஸ்வரர்

இத் தலத்தில் துர்க்கை சிவ துர்க்கை, விஷ்ணு துர்க்கை, வைஷ்ணவி என மூன்று வடிவங்களாக அருளு கிறாள். மாசி மாதத்தில் 13,14,15 தேதிகளில் சூரியனது கிரணங்கள் இறைவன் மீதும், இறைவி மீதும் நேரடியாக விழுவது தனி சிறப்பு..!



e-magazine
aanmeegamalar.com

# நவ துர்க்கை

e-magazine
aanmeegamalar.com



சைலபுத்ரி



பிரம்மசாரிணி



சந்திரகாண்டா

துர்க்கையின் ஒன்பது வடிவங்கள் நவதுர்க்கை என கூறப்படுகின்றது.

நவ என்றால் ஒன்பது என்பது பொருள்

துர்க்கைக்கு ஒன்பது வடிவங்கள் இருப்பதாக வேதங்கள் கூறுகின்றது.

நவ துர்க்கைகள் அவதாரங்கள்

1. சைலபுத்ரி
2. பிரம்மசாரிணி
3. சந்திரகாண்டா
4. கூஷ்மாண்டா
5. ஸ்கந்தமாதா
6. காத்யாயனி
7. காளராத்திரி
8. மகாகௌரி
9. சித்திதாத்ரி

## 1.சைலபுத்ரி

துர்க்கை அம்மனின் முதல் வடிவம் சைலபுத்ரி. நவராத்திரி முதல் நாளில் சைலபுத்ரி துர்க்கையை வழிபடுவது வழக்கம். சைலபுத்ரி என்பது 'மலைமகள்' என்று பொருள். மலை அரசனான இமவானின் என்பவரின் மகள் இவர். இவருக்கு பார்வதி, சதி, பவானி தேவி என பல்வேறு பெயர்கள் உள்ளன.

இவர் தனது முன் அவதாரத்தின் தட்சனின் மகளாக பிறந்ததால் 'தாட்சாயினி' என்றும் கூறுவர். இவர் தான் சிவனை திருமணம் செய்த பார்வதி தேவி ஆவார்.

ஒன்பது சக்கரங்களில் முதல் சக்கரமாக, மூலாதாரமாக விளங்குகின்றார். இவரின் வாக னம் நந்தியாகவும், ஆயுதம் சூலத்தையும் ஏந்தி நிற்கிறாள்.

## 2.பிரம்மசாரிணி

நவராத்திரி திருவிழாவில் இரண்டாம் நாளில் வணங்கப்படும் துர்க்கையாக பிரம்மசாரிணி தேவியை வணங்கப்படுகிறது.

'பிரம்ம' என்றால் தபஸ் அதாவது தவம் செய்தல் என்று பொருள். மிக எளிமையாக காட்சி தரும் இந்த பிரம்மசாரிணியின் வலக் கரத்தில் கமண்டலம் காணப்படுகிறது.ம். இந்த துர்க்கைக்கு வாகனம் ஏதும் இல்லை.

சிவ பெருமானை திருமணம் செய்யும் பொருட்டு பல ஆயிரம் ஆண்டுகளாக கடும் தவம் புரிந்தார்.

இவரின் தவ உக்கிரம் மூன்று உலகங் களையும் உலுக்கியது. இறுதியில் சிவ பெருமான் பிரம்மசாரிணியைத் திருமணம் புரிந்தார் என்பது புராணக் கதை.

அறிவு, ஞானம், நன்றி நிறைந்த பிரம்மச் சாரிணியை வணங்குவதன் மூலம் பொறுமையைத் தர வல்லவள். அதோடு சோம்பலை நீக்கி சுறுசுறுப்பை தரவல்லவர்.



கூஷ்மாண்டா



ஸ்கந்தமாதா



காத்யாயனி

e-magazine
aanmeegamalar.com

பிரம்மசாரிணி மந்திரம் :

"ததாநகர பத்மபியம் அக்ஷமாலா
கமண்டலம் தேவி பிரசிதட்டு மயி
பிரம்மசாரின நுத்தன"

பிரம்மசாரிணி துர்க்கைக்கு கன்னியாகுமரியில் கோயில் உள்ளது.

## 3.சந்திரகாண்டா

நவராத்திரியின் மூன்றாம் நாளில் சந்திர காண்டா அன்னையை வணங்கப்படுகிறார். இவர் அன்னையின் மூன்றாவது வடிவமாவார். நீதியை நிலை நாட்டி சந்திர பிறையை அணிந்தவள். 'சந்திர' என்றால் நிலவு. 'காண்டா' என்றால் மணி என்று பொருள்.

சந்திர மணி அணிந்த சந்திர காண்டா, பத்து கைகளை கொண்டு காட்சி தருகின்றார். இவர் சிங்க வாகனத்துடன் அருளுகின்றார்.

சந்திரகாண்டா போருக்கு தயாரான கோலத்தில் காட்சி தருகிறார்.

சந்திரகாண்டா தியான மந்திரம்;

"ப்ரிடிஞ்சபர வரூதா சந்திரகோபஸ்த
கரியுதா, பிரசாதம் தந்துனே மகாயும்
சந்திரகண்டெதி விஸ்ருதா "

இவளின் கோவில்கள்: உத்தர பிரதேசம், வாரணாசியில் உள்ள சித்ரகந்த குல்லி கோயில்.

## 4.கூஷ்மாண்டா

நவராத்திரி விழாவின் 4ஆம் நாளான சதுர்த்தி தினத்தன்று 'கூஷ்மாண்டா' வடிவ துர்க்கையை வணங்குவது வழக்கம். கு, உஷ்மா, ஆண்டா என்ற மூன்று சொற்கள் உள்ள பெயரின் முறையே சிறிய, வெப்பமான, உருண்டை என்ற பொருள் கொண்டது.

கூஷ்மாண்டா என்பவர் ஆதிசக்தி துர்கா தேவியின் படைத்தல் உருவம் ஆகும். இவர் சூரியமண்டலத்தை இயக்குவதாகக் கூறப்படுகின்றது. இவரை வணங்குவோர் உடல் , மன வலிமை பெறுவர்.

கூஷ்மாண்டா தியான மந்திரம்:

"சூரா சம்பூர்ண கலசம் ருத்ரபலு
தவமேவச்சா ததான ஹஸ்த பத்மப்யாம்
கூஷ்மாண்டா சுபதாஸ்து மே"

கூஷ்மாண்டாவுக்கான கோவில்கள்: உத்தர பிரதேசம், கான்பூர் நகரில் உள்ள கதம்பூர்.

## 5.ஸ்கந்தமாதா

'ஸ்ரீ ஸ்கந்த மாதா நவராத்திரி விழாவின் 5ம் நாளில் வணங்கப்படுகின்றாள். ஸ்கந்த என்றால் முருகனை குறிக்கும். மாதா என்றால் அன்னை அதாவது முருகனின் தாய் ஆவார்

இவர் தேவர்கள், மனிதர்களுக்கு பகைவர்களாக விளங்கிய சூரபத்மனை (தாரகாசுரனை) வதம் செய்தவள். தேவர்களின் சேனாதிபதியாக விளங்கும் முருகனின் தாயாக மிகவும் மதிக்கப்படுபவள் ஆவார்.

உருவம்: நான்கு கரங்களை உடைய ஸ்கந்த மாதா இரண்டு கரங்களில் தாமரையும், ஒரு கரம் பக்தர்களுக்கு ஆசி வழங்குவது போன்றும், மற்றொரு கரம் மடியில் குழந்தை முருகனை ஆறுமுகத்துடன் அரவணைத்து காட்சி தருகின்றாள். இவர் தாமரை மலர் மீது அமர்ந்து தவம் செய்பவளாக விளங்குகின்றார்.



காளராத்திரி



மகாகௌரி



சித்திதாத்ரி

இவரை வணங்குவோரை கைவிட மாட்டாள். மோட்சத்திற்கு இட்டுச் செல்வார் என நம்பப் படுகின்றார்.

ஸ்கந்த மாதா மந்திரம்:

"சின்ஹாசன் கட நித்யம் பத்மஸ்ரித் கர்தவ்ய சுபதஸ்து சதா தேவி ஸ்கந்த மாதா யஷஷ்வினி"

மற்ற தேவிகளுக்கு இல்லாத சிறப்புகள் இவருக்கு உண்டு. இவரை வழிபடும் போது நாம் முருகனையும் சேர்த்து வணங்குகின்றோம். இத னால் இருவரின் ஆசி நமக்குகிட்டுகின்றது.

## 6.காத்யாயனி

நவராத்திரி விழாவின் ஆறாம் நாளில் மாதா காத்யாயனியை வணங்குவது வழக்கம்.

முற்காலத்தில் காதா என்ற முனிவர் இருந்தார். அவருக்கு காதயா என்ற மகன் இருந்தார். காதா கடும் தவம் செய்து துர்க்கையை மகளாக பெற்றார். இதனால் இவருக்கு 'காத்யாயனி' என்ற பெயர் வந்தது. இவருக்கு மகிஷாசுர மர்த்தினி என்ற பெயரும் உண்டு.

காத்யாயனி தியான மந்திரம் :

"சந்திர ஹஸூஜ் வல்கார லவர் வாஹன் காத்யாயனி சுப் தத்யா தேவி தவன் தாதினி"

காத்யாயனி கோவில்கள்:

டெல்லி, சட்டர்பூரில் கோயில் உள்ளது.

தமிழகத்தில், தஞ்சையில் காத்யாயனி அம்மன் கோவில் உள்ளது.

## 7.காளராத்திரி

நவராத்திரி திருவிழாவின் ஏழாம் நாளில் 'காள ராத்திரி' யை வழிபடுவது வழக்கம். அன்னையின் ஒன்பது ரூபங்களில் மிக பயங்கரமான ரூபம் இந்த காளராத்திரி எனும் காளி ரூபம்.

காள என்றால் நேரத்தையும், மரணத்தையும் குறிக்கும். ராத்திரி என்றால் இரவு எனவும் பொருள். காளராத்திரி என்றால் காலத்தின் முடிவு என பொருள்படும்.

இந்த துர்க்கை வடிவம் எதிரிக்கும் அச்சத்தைத் தரக்கூடியது.இவளின் நான்கு கைகளின், ஒன்றில் கரத்தில் வஜ்ராயுதமும், மறுகரத்தில் வாளும் இருக்கும். மற்ற இரு கரங்கள் பக்தர்களுக்கு அபயம் தருவதாக உள்ளது.

இந்த அன்னைக்கு கழுதை வாகனமாக உள்ளது. இவளின் பார்வை பட்டாலே துன்பமும், பாவமும் தொலைந்திடும். பேய் பிசாசுகள் பயந்து ஓடும் என்றும் நம்புகின்றனர்.

காளராத்திரி மந்திரம்:

"வாம படொள்ள சல்லோஹலட கந்தக பூஷணா, வர்தான முர்தா திவ்ய கிருஷ்ண காளராத்திரி பயங்கரி"

காளராத்திரி கோவில்கள்:

காளராத்திரி துர்கா ஆலயம், வாரணாசி, உத்தரப் பிரதேசம்

## 8.மகாகௌரி

மகா கௌரி துர்க்கை அம்மனை நவராத்திரி தினத்தின் 8ஆம் நாளில் வணங்கப்படுகின்றது.

மகா என்றால் பெரிய என்றும், கௌரி என்றால் தூய்மையானவள் என்றும் பொருள்படும். இவரின் பால் போல் வெண்மையாகக் காட்சி தருகின்றார்.

முற்காலத்தில் மகாகௌரி, ஈசனை மணம் செய்து கொள்ள வேண்டி கடுமையாக தவத்தை மேற்கொண்டார். அப்போது அவரின் உடலை மண் சூழ்ந்து கருமையாக்கியது. இவரின் தவத்தை மெச்சிய சிவன் இவரை மணந்து கொள்வதாக கூறினார். ஆனால் அதற்கு முன்

கங்கை நீரில் நீராடினார். அப்போது தேவியின் உடல் பால் போன்று வெண்மையாக மாறியதால் இவரை மகாகௌரி என அழைக்கப்படுகிறார்.

நான்கு கரம் கொண்ட மகாகௌரி, ஒரு கரத்தில் சூலம், மறு கரத்தில் மணியையும் தங்கி நிற்கிறாள். மற்ற இரு கரங்கள் பக்தர்களுக்கு அபயம் தருகிறார். இவருக்கு வெண்மையான காளை வாகனமாக இருக்கின்றது. இவளின் அருள் கிடைத்தால் நம் வாழ்வு வசந்தமாகும்.

மகாகௌரி தியான மந்திரம்:

“ஸ்வேத விருஷப சமாருத ஷ்வேதாம்பர தாரா ஷுச்சின் மகாகௌரி சுபம் தத்யான் மகாதேவ பிரமோததா”

மகாகௌரி கோவில்கள்: கண்க்ஹல், ஹரித்வார், உத்தரகண்ட் மாநிலம்

## 9.சித்திதாத்ரி

நவராத்திரி விழாவின் கடைசி நாளான மகா நவமி தினத்தில் ‘சித்தி தாத்ரி’ துர்க்கை வழிபாடு செய்வர். ‘சித்தி’ என்றால் சக்தி என்றும், தாத்ரி என்றாள் அருள்பவள், அதாவது சக்தியை அருள்பவள் என்று பொருள்.

மார்கண்டேய புராணத்தில் பக்தர்களுக்கு அன்னை அருளிய எட்டு விதமான சித்திகளான சித்திகள் அணிமா, மகிமா, கரிமா, லஹிமா, ப்ராப்தி, பிரகாமியம், வாசித்வம், ஈசத்வம் வழங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தாமரை மலரில் அமர்ந்திருக்கும் சித்திதாத்ரி, நான்கு கரங்களில், இடது கரத்தில் கதை, சக்கரத்துடனும், வலக் கரத்தில் தாமரை, சங்கு ஏந்தியும் அருள்பவள்.

சித்திதாத்ரி அன்னையின் வாகனம் சிங்கம். சிவன் பெருமானே இவளை வழிபாடு செய்து அனைத்து சித்திகளையும் பெற்று ‘அர்த்தநாரீஸ்வரர்’ ஆனார் என தேவி புராணம் கூறுகிறது.

மோட்சத்தை அருளக்கூடிய சித்திதாத்ரி தேவியை எந்நேரமும் மனிதர், தேவர், முனிவர், யட்சர், கிங்கரர் வழிபடுவர்.

சித்திதாத்ரி யோக மந்திரம்:

“சித்த, கந்தர்வ், யக்யாதிர்,சூர்ஆர்
மரைரபி, சேவயாமணா சதா போயாத்
சித்திதா சித்தி தாயினீ”

## ஏணியில் 27 நட்சத்திரங்களுடன் காட்சிதரும் காளஹஸ்தி சிவன்




காளஹஸ்தி. பஞ்சபூத தலங்களில் இது வாயு ஸ்தலம். அங்கு ஒன்பது படிகள் கொண்ட தங்க ஏணியில் ஒவ்வொன்றிலும் மூன்று மலர்கள் பொறிக்கப்பட்டிருக்கும். இந்த 3X9 என்பது 27 நட்சத்திரத்தைக் குறிக்கும். 27 நட்சத்திரங்களும் இந்த ஏணியில் ஆவாகனம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஏணி சிவலிங்கத்தின்மீது சாய்த்து வைக்கப் பட்டிருக்கும். அதைத் தீபாராதனை காட்டும் போது மட்டும் தான் பார்க்க முடியும்...




ஏணி இல்லாமல் காட்சி தரும் சிவன்

aanmeegamalar.com e-magazine

# சிவவழிபாட்டை பூர்த்தி செய்யும் தட்சிணாமூர்த்தி

## ஞான குரு, நவக்கிரக குரு வேறுபாட்டை எப்படி அறிவது







**குருப்ரஹ்மா: குருர்விஷ்ணு: குரு
தேவோ மஹேஸ்வர:
குரு சாக்ஷாத் பரப்ரஹ்ம
தஸ்மைஸ்ரீ குருவே நம:**

என்ற ஸ்லோகத்தில் குரு என்ற வார்த்தைக்கு தட்சிணாமூர்த்தி என்று அர்த்தம். ஆனால் குரு என குறிப்பிடப்படுவதால் குரு பகவானும், தட்சிணாமூர்த்தியும் ஒன்று என பலரும் நினைத்துக் கொண்டிருக்கின்றனர்.

சிவன் கோயிலில் தென்முகம் பார்த்து அருள் பாலிப்பவர் தட்சிணாமூர்த்தி. இவர் எப்போது

e-magazine
aanmeegamalar.com



தியானத்தில் ஆழ்ந்திருப்பார். தட்சிணாமூர்த்தி என்பவர் ஞான குரு. அவருக்கு விருப்பமான நிறம் வெண்மை. அதனால் அவர் வெண்ணிற ஆடையில் அருள்பாலிப்பார். (ஸ்வேதாம்பரதரம் ஸ்வேதம்) என வேதத்தில் குறிப்பிடப்படுகிறது. அதாவது ஸ்வேதம் என்றால் வெண்மை என்று பொருள்.

இவர் சிவ பெருமானின் ரூபம். ஸநகாதி முனிவர்களுக்கு வேத ஆகமத்தை உபதேசிக்கும் குருவின் உருவமாக தட்சிணாமூர்த்தி கல்லால மரத்தின் அடியில் அமர்ந்திருக்கக் கூடியவர். இவரை ஞான குரு அல்லது ஆதி குரு என அழைக்கப்படுகிறார்.

நவகிரகங்களில் இருக்கக் கூடிய குரு பகவானோ வடக்கு திசை நோக்கி வீற்றிருப்பார். இவருக்கு உகந்த நிறம் மஞ்சள். அதே போல் அவருக்கு விருப்பமான நைவேத்தியம் கொண் டைக் கடலை.

இவருக்கு மஞ்சள் வஸ்திரத்தைச் சாற்றுவதும். கொண்டைக்கடலை மாலை அணிவிப்பதும் உகந் தது.

நவக்கிரக குரு என்பவர் இந்திர லோகத்தில், தேவர்களுக்கெல்லாம் குருவாக, ஆலோசனை வழங்கக் கூடியவராக அதாவது ஆசிரியர் பணி யை செய்யக் கூடியவர் ப்ருஹஸ்பதி எனும் குரு பகவான்.

பொதுவாக ஜாதகத்தில் குருபெயர்ச்சி, சனிப்பெயர்ச்சி, ராகு பெயர்ச்சி என்ற காலகட்டத்தில் சனிபெயர்ச்சிக்கு எப்படி சனிபகவானை குறித்து பூஜைகள் செய்கிறோமோ, அதேப்போன்று குருபெயர்ச்சிக்கு நவக்கிரக குருவை குறித்துதான் பூஜை செய்ய வேண்டும்.

கிரகங்களின் பெயர்ச்சிக்கு அந்த அந்த நவக்கிரகங்களையே ஆதாரமாக வழிபடவேண்டும். இன்றும் ஒருசிலர் குருபெயர்ச்சியன்று தட்சிணாமூர்த்திக்கு சிறப்பு பூஜைகள் செய்வதற்கும், குரு பெயர்ச்சிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

உண்மையில் தட்சிணாமூர்த்திக்கு என்று தனிச் சிறப்புகள் உள்ளது. தட்சிணாமூர்த்தி கிரகங்கள் வரிசையில் ஆராதனைக்குரிய தெய்வம் கிடையாது.

சிவனின் மறு அம்சமே தட்சிணாமூர்த்தி, சிவனின் அருள்வேண்டுவோர் தட்சிணா மூர்த்தியை வணங்காமல் சிவனருள் கிடைக்காது.

பொதுவாக மதி என்கிற சந்திரனை சூடிய கடவுள்கள் வழிபாடு நமது கர்மவினைகளை போக்கக்கூடியது.

பிறைசூடிய தெய்வங்கள் சிவபெருமானை பிரதிபலிக்கும் தெய்வங்கள் ஆகும். அவ்வாறு இருக்கும் தெய்வங்கள் சிவபெருமானின் அம்சம் பொருந்தியவையே.

நமது சிவ வழிபாட்டில் வரும் தடைகளும், இடையூறுகளும் முதலில் நமது மனதை பாதிக்கக் கூடியவை.

இவ்வாறு வரும் இடையூறுகளை களைந்து சிவ வழிபாடு முழுமை பெற இரண்டு சிவ வடிவங்களின் அருள் மிகவும் தேவை.

முதலில் வரும் சிவ வடிவம் அமைதியே உருவான தென்முகக்கடவுள் (தட்சணாமூர்த்தி).

இறுதியாக வரும் சிவ வடிவம் பைரவர். பைர வர் என்றால் எந்த பைரவர் வேண்டுமானாலும் இருக்கலாம்.

இந்த இரண்டு சிவ வடிவங்களின் துணை யின்றி சிவ வழிபாடு முழுமை பெறாது.

இந்த இரண்டு சிவ வடிவங்கள் மொத்தம் உள்ள 64 சிவ வடிவங்களிலும், வழிபாட்டிற்குரிய 25 சிவ வடிவங்களிலும் மிக மிக முக்கியமானவை.

தட்சணாமூர்த்தி மற்றும் பைரவர் ஆகிய இரு சிவ வடிவங்களும் ஒவ்வொரு சிவாலயங்களிலும் தனித்தனி சந்நிதி கொண்டு அருள் வழங்கும் வடிவங்கள் ஆகும்.



தட்சணாமூர்த்தி மற்றும் பைரவர் தலையில் மூன்றாம் பிறை சந்திரனை சூடியவர்கள்.

தட்சணாமூர்த்தி சிவபெருமானின் யோக வடிவம். ஞானகுரு என்றழைக்கப்படும் தட்சணா மூர்த்தி அமைதியே உருவானவர். சிவ வடிவங் களில் மிகவும் சிறப்பானவர். தென் திசையை நோக்குபவர். இவரை வழிபடுவது மிகவும் எளிது.

இவரை வழிபட கடினமான வழிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் ஏதும் கிடையாது.

இவரை தொடர்ந்து வழிபட ஞானமும், செல்வமும், வெற்றியும் உண்டாகும். நமது கர்ம வினைகள் படிப்படியாக நீங்கும்.

மந்திர ஜெபம் செய்பவர்களுக்கு உகந்த கட வுள் இவரே. இவரை வழிபட மனம் அமைதி பெறும். இவரிடம் வேண்டிய கோரிக்கைகள் மட்டுமல்லாமல் வேண்டாமல் மறந்து போன கோரிக்கைகளும் நிறைவேறும்.

மந்திர செபம் செய்பவர்களின் மந்திர செபங்களுக்கு சக்தியை தருபவரும் இவரே. மனநிம்மதியை தருபவரும் இவரே.

**“ஓம் நமோ பகவதே தக்ஷிணாமூர்த்தயே மஹ்யம் மேதாம் ப்ரஞ்ஞாம் ப்ரயச்ச ஸ்வாஹா”**

மேற்கண்ட மந்திரம் தட்சணாமூர்த்தியின் சிறப்பான மந்திரம் ஆகும்.

இந்த மந்திரம் ஜெபிக்க பெரிய கட்டுப்பாடுகள் ஏதும் இல்லை. அசைவம் ஒன்று மட்டும் சாப்பிடக்கூடாது.

மேற்கண்ட மந்திரத்தை வியாழக்கிழமை 108 முறை செபிக்க வேண்டும். பின்பு தினமும் 108 முறை அல்லது 54 முறை அல்லது 27 முறை செபிக்க வேண்டும்.

இந்த மந்திரம் சகல தோஷங்களையும், சகல பாவங்களையும் நீக்க வல்லது.

தட்சணாமூர்த்தியின் முன்பு எவ்வித தோஷ மும், பாவமும் நில்லாது ஓடும். இவ்வாறு தொடர்ந்து செபித்து வர நமது கர்மவினைகள் முற்றிலுமாக நீங்கி 16 பேறுகளையும் பெறுவது திண்ணம்.

தட்சிணாமூர்த்திக்கு நல்லெண்ணெய், தேங் காய் எண்ணெய், நெய் ஆகியவை கலந்த விளக் கேற்றி வழிபட வேண்டும்.

தட்சிணாமூர்த்திக்கு பிடித்த முல்லைஅல்லது மல்லிகை மாலை அணிவித்து, கொண் டைக்கடலை,வெற்றிலை,பாக்கு,பழத்துடன்வழிபட வேண்டும். இதுதான் தட்சிணாமூர்த்திக்குரிய வழிபாடு மற்றும் சிறப்புகள்.

சிவனின் மறு உருவமாகவே தட்சிணாமூர்த்தி விளங்குகிறார்.

ஆனால் நவக்கிரங்களில் உள்ள குருபகவான், தேவலோக தேவர்களுக்கு மட்டுமே ஆசானாக விளங்குகிறார். எப்படி நவக்கிரகங்கள் ஒவ்வொரு மனிதனின் வாழ்வில் தொடர்பு வைத்துள்ளதோ, அதேப்போன்று நவக்கிரக குருவுக்கும் மனிதர் களின் ஜாதகத்தில் தொடர்புடையவராக விளங்குகிறார்.

இனி தட்சிணாமூர்த்தி வழிபாட்டையும், நவக் கிரக குரு வழிபாட்டையும் இணைக்காமல் நமது பூஜை வழிபாட்டு முறையையின் தன்மையை புரிந்து கொண்டு வழிபாடு செய்வோம்.

# நம்ம ஊரு கோவில்

உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.


தொடர்பு எண்: 9444228203

இ–மெயில் முகவரி:

aanmeegamalar@gmail.com




# பிள்ளையார் வழிபாடு



- முருகர், அம்பிக்கை ராமர், கிருஷ்ணர் முதலிய உருவங்கள் சிற்ப முறைப்படி செய்து வழிபட வேண்டியவை. அவை சிற்ப லட்சணத்திற்கு மாறுபட்டிருந்தால் வழிபாடு செய்பவருக்கு நன்மை கிடைக்காது. ஆனால் பிள்ளையார் உருவம் அப்படி அல்ல. மஞ்சளை அரைத்து ஒரு சிறு குழந்தை கூட பிடித்து வைத்தால் போதும் பிள்ளையார் தயார். பிள்ளையார் அவ் வடிவில் எழுந் தருளி அருள்புரிவார்.
- சந்தனம், களி மண், மஞ்சள், சாணம் இப்படி எளிதாகக் கிடைக்க கூடிய பொருளில் விநாய கரை செய்து வழிபடுவார்கள்.
- விநாயகருக்கு எளிதாக கிடைக்கக் கூடிய அருகம்புல் மிக விருப்பம். அருகு வைத்து விநாயகரை வழிபட்டால் பிறவிப் பிணி நீங்கி, இன்பம் பெருகும்.
- மண்ணால் செய்த பிள்ளையாரை வழிபட் டால் நற்பதவி கிடைக்கும்.
- புற்றுமண்ணால் உருவாக்கிய பிள்ளையாரை வணங்கி வழிபட வியாபார லாபம் கிடைக் கும்.
- உப்பினால் உருவான விநாயகரை வணங் கிட எதிரிகள் அழிந்து நிம்மதி பிறக்கும்.
- கல்லால் அமைந்த விநாயகரை வணங்கிட வெற்றிகிட்டும்.
- வெள்ளெருக்கால் செய்த பிள்ளையாரை வழிபட செல்வம் சேர்ந்து மகிழ்ச்சி நிலவும்.
- மஞ்சள் பொடியால் ஆன பிள்ளையாரை வழிபட சகல காரியங்களும் நன்றாக நடக்கும்.
- வெல்லத்தினால் செய்யப்பட்ட பிள்ளையாரை வழிபட வாழ்வு வளம்பெறும்.
- பதஞ்சாணியால் உருவாக்கப்பட்ட பிள்ளையாரை வழிபட வியாதிகள் நீங்கி வளம்பிறக்கும்.







Scan to Read aanmeegamalar Website


e-magazine
aanmeegamalar.com

# விநாயகர் சஷ்டி விரதம்

கார்த்திகை மாதத்து கிருஷ்ணபட்சப் பிரத மையில் தொடங்கி, மார்கழி மாதத்து சுக்ல பட்ச சஷ்டி வரையிலான 21 நாட்கள் அனுஷ்டிக்கப்படும் விரதம் ‘விநாயகர் சஷ்டி விரதம்’ ஆகும். விநாயகர் சதுர்த்தியை அடுத்து, விநாயகப்பெருமானை வழி படக்கூடிய சிறப்பு மிக்க விரதத்தில் ஒன்று இது.

அவருடைய தோற்றமே தெய்வீகமானது. புனிதப் பிறவியாகிய மனிதப் பிறவி எடுத்திருக் கும் ஒவ்வொருவரும் இந்த விநாயகப் பெரு மானுடைய திருவருளைப் பெறுவதற்கு வழிகாட்டு கின்ற புண்ணிய விரதம் இந்தப் பெருங்கதை விரதமேயாகும்.

இந்த விரதத்தை மிகுந்த பயபக்தியோடு கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். ஒருமுறை விக்கிரமாதித்தனின் மனைவியான இலக்கண சுந்தரி, இவ்விரதத்தைக் கடைப்பிடித்தாள். ஆணவம் மிகுதியால், இடையில் நோன்பை கைவிட்டு, கையில் கட்டி யிருந்த கயிற்றை கழற்றி எறிந்தாள்.

அதன் விளைவாக, அவளது கணவன் விக்கிரமாதித்தனால் துரத்தப்பட்டு, காட்டி லேயே சில காலம் வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டாள். பின்னர் காட்டில் இருந்தபடியே விநா யகர் சஷ்டி விரதத்தை கடைப்பிடித்து, பிரிந்த தனது கணவருடன் சேர்ந்தாள் என்பது புராணக் கதை.


இளநீர், கடலை, அவல், பொரி, எள்ளுருண்டை போன்றவற்றை நைவேத்தியமாக படைக்கலாம். மேலும் அறுகம்புல், எருக்கம்பூ, பன்னீர்பத்திரம் ஆகியவற்றால் அர்ச்சனை செய்யும் இறைவனை வழிபடலாம். விநாயகர் சஷ்டி விரத நாட்களில், வீட்டில் இருந்தபடியோ அல்லது தினமும் ஆலயங் களுக்கு சென்றோ, விநாயகரின் கதையை வாசித்தும், அவரது துதிப் பாடல்களைப் பாடியும் விரதத்தை கடைப்பிடிக்க வேண்டும்.

இறுதி நாளான சஷ்டி அன்று முழு உபவாசம் இருந்து, மறுநாள் காலையில் கையில் கட்டி யிருந்த நோன்புக் கயிற்றைக் கழற்றிய பின்னர், விநாயகரை பாராயணம் செய்து விரதத்தை முடிக்க வேண்டும்.

21 நாட்களும் விநாயகரின் திருக் கதைகளைப் படிப்பதும், விநாயகரின் திருவிளையாடல்களைப் பேசக் கேட்பதும் மிகப் புண்ணியமாகும்.

விநாயகர் ஆலயங்களில் விசேஷ அபிஷேகங்கள், ஆராதனைகள் நடைபெற்ற பின், பவித்ரமான விநாயகப் பெருமானின் சரிதத்தைப்பாரா யணம்செய்யலாம். உபன்யாசம் செய்யக் கேட்டும் பயன் பெறலாம்.






aanmeegamalar.com

# நான்கு யுகங்களில் விநாயகர் அவதாரம்

இந்துக்களின் புராணங்களில் விநாயகர் மற்றைய இந்துக்கடவுள்களான சிவன், பார்வதி ஆகியோரின் பிள்ளையாகவும் முருகன் எனும் கடவுளின் அண்ணனாகவும் கூறப்படுகிறார். இக்கடவுளின் வாகனம் மூஞ்சூறு.

'கணேச புராணம்', கிருத, திரேதா, துவாபர, கலி ஆகிய நான்கு யுகங்களிலும் நான்கு அவதாரங்களாக அவதரிப்பதாகக் கூறுகின்றது.

**கிருத யுகம்:** காஸ்யப முனிவருக்கும் அதீதீ தேவிக்கும் பிள்ளையாக அவதரித்து அசுரர்களை அழித்து தர்மத்தை நிலைநாட்டினார். கிருத யுக அவதாரத்தில் பிள்ளையாரின் திருநாமம் மகாகடர்.

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

**திரேதாயுகம்:** அம்பிகை பார்வதியின் பிள்ளையாக அவதரித்து, அழகான மிகப்பெரிய மயிலை தம் குழந்தைப் பருவத்தில் பிடித்து விளையாடியதால் மயூரேசர் என்ற திருநாமத்துடன் காட்சி தந்தார் விநாயகர்.

**துவாபரயுகம்:** கஜானனன் என்ற திருநாமத்துடன் அவதரித்து, பராசர மகரிஷி மற்றும் பராசர மகரிஷியின் தேவி வத்ஸலாவால் சிறப்பாக வளர்க்கப்பட்டார்.

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

**கலி யுகம்:** சிவபெருமானுக்கும் அம்பிகை பார்வதி தேவிக்கும் குழந்தையாக அவதரித்து அதர்மம் செய்வோரின் செயல்களில் தடங்கல்களையும் தர்மநெறியில் இருப்போரின் இன்னல்களைப் போக்கியும் வருவதாகக் கணேச புராணம் குறிப்பிடுகின்றது.

# விநாயகர் திருவுருவ விளக்கம்



e-magazine
aanmeegamalar.com

## திருவடி

ஆன்மாவைப் பொருந்தி நின்று மல, கன்ம, மாயைகளைத் தொழிற்படுத்தி இருமை இன்பத்தை அளிப்பது ஞானம். அந்த ஞானமே விநாயகரின் திருவடிகளாக இருக்கின்றன.

## பெருவயிறு

ஆகாசம் எல்லாப் பொருள்களும் தன்னகத்து ஒடுங்கவும், உண்டாகவும் இடந்தந்து இருப்பது போலப் பெருவயிறாகிய ஆகாசமும் எல்லா உலகங்களும் உயிர்களும் தம்முள் அடங்கியிருக்கின்றன என்பதைக் குறிப்பிடுகின்றது.

## ஐந்துகரங்கள்

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

பிள்ளையாரின் ஒரு கை பாசத்தை ஏந்தியுள்ளது. அது படைத்தலைக் குறிக்கிறது. எனவே இவரே பிரம்மாவாகிறார். தந்தம் ஏந்திய கை காத்தலைக் குறிக்கிறது. எனவே இவரே மகாவிஷ்ணுவாகிறார் துதிக்கை அனுக்ரகம் செய்கிறது.

அங்குசம் ஏந்திய கை அழித்தலைக்குறிக்கிறது. எனவே, இவர் ருத்ரர் ஆகிறார் மோதகம் ஏந்திய கை அருளைக் குறிக்கிறது. எனவே, இவரே சர்வ சக்தி படைத்த பரமேஸ்வரனாக வும் இருக்கிறார்

## கொம்புகள்

மகாபாரதத்தை எழுதுவதற்காகத் தமது கொம்பையே ஒடித்தது வெளித்தோற்றத்தை விட அறிவுக்கு முன்னுரிமை தர வேண்டியதை உணர்த்துவதாகக் கூறப்படுகின்றது.[11]

## தாழ்செவி

விநாயகரின் முறம் போன்ற பெரிய காதுகள் செவியில் விழும் செய்திகளைச் சலித்து நல்லவற்றை மட்டும் தேர்ந்து வைத்துக்கொள்ள வேண்டும் என்பதைக் குறிக்கின்றன.

# காசியில் அருள்பாலிக்கும் சூரிய பகவான் கோவில்கள்

e-magazine
aanmeegamalar.com

### லோலார்க் ஆதித்யா

லோலார்க் ஆதித்யா காசியின் தெற்குப் பகுதியில் லோலார்க் குண்டத்தில்,அசிகங்கா சங்கமத்திற்கு அருகில் அமைந் துள்ளார்.

காசி காண்டத்தில் லோலார்க்குண்டத் திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்



லோலார்க் ஆதித்யா

பட்டுள்ளது. பண்டைய காலங்களில், லோலார்க் குண்ட் கங்கை மற்றும் அசி நதி யுடன் சங்கமிப்பதாக நம்பப்பட்டது, ஆனால் இப்போது இது ஒரு குண்டம் (குளம்) வடிவத்தில் மட்டுமே உள்ளது. இப்போதும், மழை நாட்களில், கங்கை நீர் சில நிலத்தடி மூலங்கள் வழியாக குண்டத்திற்குள் நுழை கிறது.

மக மாதத்தில் சுக்ல ஷஷ்டி அல்லது சப்தமி (அமாவாசைக்குப் பிறகு ஆறாவது அல்லது ஏழாவது நாள்) ஞாயிற்றுக்கிழமையுடன் இணைந்திருக்கும் போது இந்த குளத்தில் குளிப்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அத்தகைய நாளில் இந்த குண்டத்தில் நீராடுவதும், பூஜை செய்வதும் பக்தர்களின் விருப்பங்கள் அனைத்தையும் நிறைவேற்றும். மேற்கூறிய ஆன்மீக செயலால் பக்தனின் ஏழு முந்தைய பிறவிகளில் செய்த பாவங்கள் நீங்கும்.

### மயூக் ஆதித்யா

ஒருமுறை சூரிய பகவான் பஞ்சந்த தீர்த்தத்தில் (பஞ்சகங்கா காட்) கபஸ்தீஸ்வரர் எனப்படும் சிவலிங்கத்தையும், மங்கள கௌரி எனப்படும் தேவி சிலையையும் நிறுவி, சிவபெருமானிடம் மிகுந்த பிரார்த்தனை செய்யத் தொடங்கினார். (பஞ் சகங்கா காட்டின் முக்கியத்துவம் வேறு இடத்தில் விவரிக்கப்பட்டுள்ளது).

சூரிய பகவானின் பிரார்த்தனையின் தீவிரம், அதனால் உருவாகும் அதீத வெப்பத்தில் பிரதிபலிக்கத் தொடங்கியது. சூரியக் கதிர்கள் வெப்பமடையத் தொடங் கின. இறுதியாக, இது அனைத்துஉ யிரினங்களுக்கும் மிகவும் தாங்க முடியாததாக மாறியது மற்றும் அனைத்து உடல் செயல்பாடுகளும் நடைமுறையில் நின்றுவிட்டன.

ஆன்மிகமலர்

இதையறிந்த சிவபெருமானும் பார்வதி தேவியும் சூரியன் முன் நேரில் தோன்றினர். சிவபெருமான் சூரியனை மெதுவாகத் தொட்டார். அதன் பிறகு கதிரவனின் தீவிர வெப்பம் மெதுவாக தணிந்து, அவர் குளிர்ந்தார். சூரிய பகவான் கண்களைத் திறந்து பார்வதி தேவி மற்றும் சிவபெருமானைப் புகழ்ந்து பாடத் தொடங்கினார், அப்போது அவர்கள் இருவரும் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். அவர்கள் சூரிய பகவானுக்கு பல தெய்வீக வரங்களை வழங்கினர்.

சிவபெருமான் சூரியனிடம், அவர் (சூரியன்) பூஜை செய்யும் போது, சூரிய கதிர்கள் மட்டுமே தெரிந்தது என்றும்





மயூக் ஆதித்யா

சூரியனின் உடல் தெரியவில்லை என்றும் கூறினார். அதன்படி, சூரிய பகவான் மயூக் ஆதித்யா என்று அழைக்கப்படுவார். மயூக் என்றால் பிரகாசம் (ஒளிர்தல்) என்று பொருள்.

ஞாயிற்றுக்கிழமைகளில் மயூக் ஆதித்யாவை வழிபடும் ஒரு பக்தனுக்கு நோய் வராது என்றும் சிவபெருமான் கூறினார்.

## சாம்பா ஆதித்யா

காசி காண்டத்தின் கூற்றுப்படி, ஒரு முறை நாரத முனிவர் துவாரகாபுரிக்கு பயணம் செய்தார், அவரை கிருஷ்ணரின் மகன்கள் அன்புடன் வரவேற்றனர். அவர்கள் மிக உயர்ந்த விருந்தோம்பலைவெளிப்படுத்தினர் மற்றும் நாரதர் மகிழ்ச்சியடைந்தார்.

இருப்பினும், சாம்பா என்ற ஒரு மகன் நாரதருக்கு எந்த மரியாதையும் கொடுக்காமல் ஒதுங்கியே இருந்தான்.

முனிவரின் அரண்மனையில் இருந்த நாரத முனிவரை கிருஷ்ணர் மிகுந்தபணிவுடன் வரவேற்றார். அனைத்து சம்பிரதாயங்களையும் இன்பங்களையும் பரிமாறிய பிறகு, நாரத முனிவர் சாம்பரின் நடத்தையை பகவான் கிருஷ்ணரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். நாரத முனிவர் ஒரு படி மேலே சென்று, சாம்பா ஒரு வலிமையான மற்றும் அழகான பையன் என்றும், அரண்மனை மற்றும் அதைச் சுற்றியுள்ள பல்வேறு பெண்களை மயக்கும் திறன் கொண்டவர் என்றும் கூறினார்.

விரைவில் நாரதர் அரணமனையைவிட்டு வெளியேறினார். பகவான் கிருஷ்ணர் சாம்பாவை உன்னிப்பாகக் கண்காணிக்கத் தொடங்கினார். ஆனால் சாம்பாவின் நடத்தையில் விரும்பத்தகாத எதுவும் காணப் படவில்லை. இருப்பினும், கண்காணிப்பு சிறிது நேரம் நீடித்தது.

சில நாட்களுக்குப் பிறகு, நாரதர் மீண்டும் துவாரகாபுரிக்குச் சென்றார். துல்லியமாக அந்த நேரத்தில், பகவான் கிருஷ்ணர் பல் வேறு பெண்களுடன் தனது தனிப்பட்ட அறைகளில் இருந்தார். நாரதர் வெளியில்




e-magazine
aanmeegamalar.com

காசியைப் பற்றி முழுமையான தகவல்களை பல்வேறு மொழிகளில் எழுதி, அனைவரும் காசியைப் பற்றி அறிந்து கொள்ள பல்வேறு முயற்சிகளை செய்யும் எழுத்தாளர் பி.எஸ்.வெங்கடரமணன் காசியைப் பற்றி முழுத் தகவல்களையும் நமது இதழில் தொடராக எழுதுகிறார். இவர் காசியைப் பற்றி எழுதிய புத்தகத்தை பாரதப் பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.





சாம்பா ஆதித்யா

சுற்றித் திரிந்த சாம்பாவை அழைத்து, பகவான் கிருஷ்ணர் வருகையைப் பற்றித் தெரிவிக்கும்படி கூறினார். சாம்பா சிறிது நேரம் தயங்கினார். அது அவருக்கு இரட்டைக் கசப்பாக இருந்தது. ஒருபுறம். அவர் உள்ளே நுழைந்து கிருஷ்ணரை தொந்தரவு செய்தால், பகவான் கோபப்படலாம். மறுபுறம், அவர் நாரதருக்குக் கீழ்ப்படியாமல் போனால், முந்தைய சந்தர்ப்பத்தில் அவர் நாரதரை மதிக்காததால் கோபப்படலாம்.

ஒரு குழப்பத்துடன், நாரதர் தன்னைப் பின்தொடர்வதை அறியாமல், கிருஷ்ணரின் அந்தரங்க அறைக்குள் சென்றார். சமரச நிலையில் இருந்த கிருஷ்ணரை இருவரும் தொந்தரவு செய்ய, அவர் மிகவும் வெட்கத்துடன் எழுந்தார்.

அவனைச் சுற்றியிருந்த எல்லாப் பெண்களும் சமமாக வெட்கப்பட்டார்கள். சாம்பா அமைதியாக அந்த இடத்தை விட்டு வெளியேறினான்.

கிருஷ்ணருடன் இருந்த பெண்கள் உண்மையில் சாம்பரின் தோற்றத்தால் மயக்கமடைந்தனர் என்று நாரதர் கிருஷ்ணருக்கு தவறான விளக்கத்தை அளித்தார். இதனால் கோபமடைந்த கிருஷ்ணர், சாம்பாவுக்கு தொழுநோய் வரும் என்று சபித்தார். இருப்பினும், சாம்பா நிரபராதி என்று மன்றாடினார்.

பகவான் கிருஷ்ணர் மிகவும் நெகிழ்ந்தார். இந்த சாபத்தைப் போக்க காசிக்குச் சென்று சூரியனைப் பிரார்த்திக்க வேண்டும் என சானணுயம்பாவிடம் கூறினார்.

அதன்படி, சாம்பா காசிக்கு வந்து, சாம்ப குண்டம் என்று அழைக்கப்படும் ஒரு குண்டத்தை தோண்டி, சூரிய பகவானுக்கு கடுமையான தவமும் பூஜையும் செய்தார். காலப்போக்கில், அவர் இந்த பயங்கரமான நோயிலிருந்து குணமடைந்தார். இத்தலத்தில் வீற்றிருக்கும் ஆதித்யர் சாம்பா ஆதித்யர் என்று அழைக்கப்படுகிறார்.

காசி காண்டம் அத்தியாயம் 48 இன் படி, ஞாயிற்றுக்கிழமைகளில் சூரிய உதயத்தில் சாம்பா குண்டத்தில் ஸ்நானம் ஆதித்யரிடம் செய்து, சாம்பா பிரார்த்தனை செய்பவருக்கு தீராத நோய் தீரும். திருமணமான எந்தப் பெண்ணும் அப்படிப் பிரார்த்தனை செய்தால் சுமங்கலியாகவே இருப்பார். சாம்பா குண்டம் இப்போது சூர்ய குண்டம்/சூரஜ் குண்டம் என்று அழைக்கப்படுகிறது.

– காசி பயணம் தொடரும்

பி.எஸ்.வெங்கடரமணன்
தொலைபேசி எண்: 9839061178

# கீதாசமையல் ஸ்பெஷல் புட்




| |
|---|
| தூதுவளை கீரை இட்லிபொடி |
| முடக்கத்தான் கீரை இட்லிபொடி |
| வல்லாரைக் கீரை இட்லிபொடி |
| முருங்கை கீரை இட்லிபொடி |
| கொள்ளு இட்லிபொடி |
| கறிவேப்பிலை இட்லிபொடி |

**மூட்டுவலி, ஞாபகமறதி, இளநரை, பிரச்சனைகளை தீர்க்கும் கீரை வகை இட்லிபொடிகள்**

**கருப்பு உளுந்து கஞ்சி மாவு**

**41 சிறுதாணிய சத்துமாவு**

fssai
R.N.22424543000080

மேற்கண்ட அனைத்தும்
நன்கு பதப்படுத்தி, மிகுந்த தரத்துடன்
வீட்டு பயன்பாட்டு முறையில் தயாரிக்கப்பட்டது.

முதுகுவலி, வயதுக்கு வந்த பெண்களுக்கும்,
கணினியில் அதிகநேரம் பணிபுரிபவர்களுக்கு ஏற்படும்
எலும்பு தேய்மானம், கழுத்து பிரச்சனைகளை தீர்க்கும்
**கருப்பு உளுந்து, சுக்கு கஞ்சி மாவு**




**இயற்கை மூலிகைகளால் சுத்தமாக தரமாக தயாரிக்கப்பட்டது**

மேலும்விபரங்களுக்கு: 7550199561

# மனிதர்களைக் கடவுளாக்கும் பாம்பு



ஒரு குழந்தை எப்படி பிறக்கிறது என்று நமக்கு தெரியும். திருமணம் என்ற பந்தத்தில் ஆண் பெண் இருவரும் புகுந்து முறைப்படியான தாம்பத்திய உறவில் அவர்கள் ஈடுபட்டு ஆண்மகனின் சுக்கிலமும் பெண்மகளின் சுரோணிதமும் ஒன்றாக கலந்து கருப்பையில் குழந்தையாக வளர்ந்து ஏறக்குறைய முன்னூறு நாட்களுக்கு பிறகு ஒரு குழந்தை மண்ணில் பிறக்கிறது என்பதை அறியாதவர் யாரும் இருக்க முடியாது. ஆணும் பெண்ணும் இணையும் நாளை கருத்தில் கொண்டு குழந்தையானது எப்போது பிறக்கும் என்பதை கூட தெளிவாக கணித்துவிட முடியும். ஆனால் அந்த குழந்தை ஏன் எதற்காக பிறந்தது அதன் பிறப்பின் நோக்கம் என்னவென்று யாராலும் அறுதியிட்டு உறுதியாக சொல்ல முடியாது. அந்த குழந்தையே கூட நாளைக்கு பெரியவனாக வளர்ந்து நான் இதற்காகத்தான் பிறப்பெடுத்தேன் என்றும் கூற இயலாது. அந்த அளவு பிறப்பின் ரகசியம் மூடி மறைக்கப்பட்டு கிடக்கிறது.


ஆன்மிகமலர்.காம்

ஒரு மனித ஜென்மா ஏன் பிறக்கிறது என்பது நம்மை போன்ற சாதாரண மனிதர்களின் அறிவுக்கு எட்டாது என்பதில் வியப்பில்லை ஆனால் படைப்பின் மூல கர்த்தாவாகிய இறைவனையே உணர்ந்த ஞானிகளுக்கு ஒரு மனிதன் ஏன் பிறந்தான் என்ற ரகசியம் தெரியாமலா போய்விடும். கண்டிப்பாக அப்படி போகாது. உலகத்தை கடந்து உடம்பை கடந்து உள்ளத்தையும் கடந்த ஞானிகளுக்கு தெரியாத இரகசியங்கள் எதுவுமே கிடையாது. அப்படி எல்லாவற்றையும் உணர்ந்த ஞானிகள் மனிதன் பிறந்ததற்கு இன்னது தான் காரணம் என்று தெளிவாக உணர்ந்து சொல்லி உள்ளார்கள். இடிவோசைக்கும் இனிய இசைக்கும் வித்தியாசம் தெரியாத நமது காதுகள். அவர்கள் மொழியை கேட்காமல் செவிடாக கிடக்கிறது.

**கடவுள் உருவாக்கிய மதம்**

ஒரு பயணம் நிறைவை அடைவது எப்போது? ராமேஸ்வரத்தில் இருந்து புறப்பட்டவன் பார்க்க வேண்டிய இடங்களை எல்லாம் பார்த்து முடித்த பிறகு மீண்டும் புறப்பட்ட ராமேஸ்வரத்திற்கே வந்து சேரும் போது தான் பயணம் பூரணமாக முடிந்தது என்று சொல்லலாம். மனிதனது பிறப்பும் வாழ்வும் பயணத்தை போன்றதே ஆகும். நமது பயணம் இறைவனின் திருவடிகளிலிருந்து துவங்குகிறது. ஆயிரம் ஆயிரம் பிறவிகள் எடுத்தாலும் அத்தனை பிறவிகளையும் முடித்து கடேசியாக எங்கே இருந்து பயணத்தை துவங்கினோமோ அங்கே அந்த இறைவனின் திருவடிகளிலேயே மீண்டும் வந்து ஐக்கியமாவது தான் ஒரு பிறப்பின் மூல காரணம்.

ஆயிர ஜென்மங்கள் எடுத்தாலும் கடேசியில் சேரவேண்டிய இடம் கடவுளின் பாதார விந்தங்களே



அதை செய்யாதே இதை செய்யாதே என்று தடுப்பானைகள் போடுவதிலேயே குறியாக இருக்கும். அல்லது சில மதங்கள் இதை செய்தால் புண்ணியம் அதை செய்தால் பாவம் என்று சுட்டிகாட்டுவதிலேயே கண்ணும் குருத்துமாக இருக்கும். வேறு சில மதங்கள் உலகம் முடிகிற ஒரு இறுதி நாள் வரும். அந்த இறுதி நாளில் கடவுள் வந்து தீர்ப்பு சொல்லுவார் தன்னை நம்பிவர்களுக்கு சொர்க்கமும் நம்மதவர்களுக்கு நரகமும் கொடுப்பார் என்று சொல்லி வளர்ந்தும் வருகின்றன ஆனால் நமது இந்துமதம் மட்டுமே இறைவனோடு இரண்டற கலப்பதற்கு வழிவகை சொல்லி மனிதனையும் தெய்வ நிலைக்கு உயர்த்துகிறது.

அறிவியல் என்ற விஞ்ஞானம் எதை ஏற்றுகொள்வதாக இருந்தாலும் அதற்கான மூல பார்மூலா என்னவென்று கேட்டு அதை தெளிவு படுத்திய பிறகே ஏற்றுகொள்ளும். உதாரணமாக ஒரு நோயை குணபடுக்த்துகிற மருந்து உடம்பிற்குள் சென்றவுடன் எத்தகைய ரசாயன மாற்றத்தை ஏற்படுத்தி நோய்க்கான மூலத்தை கண்டறிந்து நிவாரணம் செய்கிறது என்பதை தெரிந்தால் மட்டுமே அது சரியான மருந்து என்று ஒத்துகொள்ளும். அதே போலவே இறைவன் என்ற ஒரு பொருள் இருக்கிறது என்றால் அதை அடைவதற்கான அல்லது அறிந்து கொள்வதற்கான பார்மூலா என்னவென்று கேட்டால் அதற்கு இருக்கும் ஒரே பதில் யோக மார்க்கம் காட்டியபடி செயல்முறை செய்து பார் இறைவனை நீயும் உணரலாம் என்ற ஆதார பூர்வமான பதிலை தருவதை யோக நெறியாகும்.

இத்தகைய அற்புதமான ஒரு செயல் வடிவத்தை மனித குலத்திற்கு முதல்முறையாக கண்டறிந்து வெளிபடுத்தியவர் பதஞ்சலி மகரிஷியே ஆவார். புவியீர்ப்பு விசையை நியுட்டன் கண்டுபிடிப்பதற்கு முன்பே அந்த ஈர்ப்பு சக்தி இருந்தது போல பதஞ் சலி மகரிஷி யோக மார்கத்தை நெறிபடுத்தி நமக்கு சொல்வதற்கு முன்பும் அது இருந்தது எனலாம். ஆனால் அதை ஒழுங்குபடுத்தி தந்தவர் என்பதனால் பதஞ்சலியை யோகத்தின் மூலவர் என்று அழைக்கிறோம். யோகம் செய்வதற்கான முத்திரைகளை சிந்துசமவெளி நாகரீக காலத்திற்கு முன்பே மக்கள் பயன்படுத்தி இருக்கிறார்கள்.

வேதங்கள் உபநிஷதங்கள் போன்றவற்றிலும் யோகத்தை பற்றி மிக விரிவான தகவல்கள் தரப்பட்டு இருக்கின்றன. வைதீக மார்க்கத்திற்கு புறம்பானதாக கருதபடுகிற ஜைன, பௌத்த மார்க்கங்களிலும் யோக முறைகளை பற்றிய

அந்த இறுதி நோக்கத்தை எதற்காக கணக்கற்ற பிறவிகள் எடுத்து அல்லலுற்று கடேசியாக வந்து சேர வேண்டும். இதோ இப்போது கிடைத்திருக்கும் இந்த பிறவியிலேயே இறைவனை அடைவதற்கான முயற்சிகளை செய்யலாமே என்று நம்மீது இறக்கம் கொண்ட பல ஞானிகள் கருதுகிறார்கள்.

ஓடி ஓடி ஓய்ந்து போய்விட்ட சில மனிதர்கள் ஐயகோ பிறவி என்பது துன்ப சாகரம் இதில் கிடந்தது உழலுவதற்கு இன்னும் தம்மால் ஆகாது எப்படியாவது கடலை கடந்து பிறப்பற்ற நிலையை அடைய வேண்டும் என்று விரும்பி அடைவதற்கு நான் தயாராக இருக்கிறேன் அதற்கான வழி என்ன என்று கேட்கிறார்கள் இறைவனை அடைவதே இறுதி லட்சியம் என்று நமக்கு அடையாளம் காட்டிய ஞானிகள் இறைவனை அடைய இது தான் பாதை என்று காட்டமலா போவார்கள் நிச்சயம் இல்லை. அப்படி அவர்கள் காட்டிய பாதையின் பெயர் தான் யோக மார்க்கம்.

இந்த உலகில் கணக்கற்ற மதங்கள் இருக்கின்றன அவைகள் அனைத்துமே



விளக்கங்கள் மிக நிறையவே இருக்கின்றன. வேதங்களிலும் புத்தமத நூல்களிலும் இதை பற்றிய விவரங்கள் நிறையவே இருந்தாலும். பதஞ்சலியை போல தெளிவான விளக்கங்களை தந்தவர்கள் யாரும் இல்லை. மனம் வாக்கு காயம் ஆகிய திரிகரனங்க்களை சுத்தபடுத்துகிற யோக சூத்திரங்களை மட்டுமல்ல உடம்பை உருதியடையை செய்யும் சரகசம்ஹிதை என்ற மருத்துவ நூலையும் மனித கருத்துக்களை இலக்கண முறைப்படி வெளிபடுத்துகிற பாணினியின் வியாகரனத்திற்கு மகாபாஷ்யம் என்ற சிறப்பான விளக்க நூலையும் பதஞ்சலி மகரிஷி தந்துள்ளார்.

பஜஞ்சலி மகரிஷி இயற்றிய யோக சூத்திரம் சமாதிபாதம், சாதனாபாதம், விபூதிபாதம், கைவல்யபாதம் என்ற நான்கு பகுதிகளை கொண்டது. இந்த நூலில் 195 சூத்திரங்கள் இருக்கின்றன. இவற்றில்

அத யோகானு சாஷனம்

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

யோகஸ் சித்த வ்ருத்தி நிரோத

என்று எடுத்த எடுப்பிலேயே மனதை புலன்கள் வழி செல்லாமல் கட்டுபடுத்தி ஒருமுகபடுத்துவதே யோகம் என்ற விளக்கத்தை நமக்கு தெளிவாக தந்துவிடுகிறார். சதா சர்வகாலமும் அலைந்து கொண்டிருக்கின்ற மனதை அடக்கி ஒருதலை படுத்துவது சாதாரணமாக முடிகின்ற வேலை அல்ல. அதற்கு பிரம்ம பிரயத்தனம் தேவை. அந்த பிரயத்தனங்கள் என்னென்ன வென்று சாதனாபாதம் இருபத்தி ஒன்பதாவது சூத்திரத்தில் விளக்கம் தருகிறார்.

யம, நியம, ஆசன, ப்ரணாயாம ப்ரத்யா
ஹார தாரண த்யான சமாதயோ

என்பது அந்த விளக்கமாகும். அதாவது இங்கு சொல்ல பட்டிருப்பது யோக மார்க்கத்தின் மிக முக்கிய அங்கங்களான அஷ்டாங்க வகைகளாகும். இதில் யம என்பது மன அடக்கத்துடன் கூடிய ஒழுக்கத்தை குறிக்கும். நியம என்பது உடல்

aanmeegamalar.com
e-magazine

தூய்மையையும் இறைவழிபாட்டையும் குறிக்கும். ஆசன என்பது உடல் பயிற்சி ப்ரணாயாமம் என்பது சுவாச பயிற்சி பிரத்தியாஹாரம் என்பது புலன்களை அடக்கும் பயிற்சி தாரணா என்பது மனதை ஒரே பொருளில் நிலை நிறுத்தும் பயிற்சி. தியானம் என்பது எண்ணங்களை கடந்து போக செய்யும் பயிற்சி சமாதி என்பது தன்னை இழந்து இறைவனை பெரும் உணர்ச்சியாகும்.

இந்த அஷ்டாங்க பயிற்சிகளை மேற்கொள்ளுகின்ற போது மூலாதாரம் சுவாதிஷ்டானம் மணிப்பூரகம் அனாகதம் விஷுத்தி ஆக்ஞா ஆகிய ஆறு ஆதாரங்களில் வழியாக மனித உடம்பிற்குள் உறங்கி கொண்டிருக்கும் இறை சக்தியானது எழுந்து ஒன்றன்பின் ஒன்றாக ஆதாரங்களை கடந்து இறுதி நிலையாகிய கபாலத்தில் உள்ள பிரம்ம கமலத்தில் வெளிப்படும் என்று பதஞ்சலி சொல்கிறார்.

உடம்பிற்குள் உறங்கும் இறை சக்தியின் பெயர் குண்டலினி இந்த குண்டலியனது உருவகபடுத்தி காட்டும் பொழுது பாம்பு வடிவத்தில் காட்டபடுகிறது. குண்டலினி பாம்பு மூலாதாரத்தில் உறங்கி கொண்டிருப்பதாகவும் அதை தட்டி எழுப்புவதன் மூலம் இறை தரிசனத்தை நேருக்கு நேராக பெறலாம் என்று யோக மார்க்கம் சொல்வதாலும் மனிதனை தெய்வ நிலைக்கு உயர்த்துவதற்கு நாக வடிவம் கொடுக்க பட்டிருப்பதாலும் நாக வழிபாட்டிற்கு இந்து மதத்தில் அதிமுக்கியத்துவம் இருக்கிறது. மேலும் இந்து மத கடவுள்களின் உருவத்தில் வடிவமைக்க பட்டுள்ள பாம்புகள் வெறும் பாம்புகளை குறிப்பது அல்ல குண்டலினி பாம்பை சுட்டி காட்டுவதே ஆகும். குண்டலினி சக்தியை ஆபரணமாக கொண்டவர் சிவன் என்பதே அவரின் நாகாபாரண தத்துவம் குண்டலினி சக்தியின் மீது நாராயணன் இருக்கிறான் என்பதை காட்டுவதே திருமாலின் பாம்பனை கோலம் இன்னும் இருக்கின்ற அனைத்து தெய்வங்களின் நாக ஆபரணங்கள் குண்டலினி சக்தியை முக்கியபடுத்தி காட்டுவதற்காகவே அமைக்கப்பட்டுள்ளது .

ஒரே ஒரு தலையுடைய பாம்பை வேண்டுமானால் குண்டலினி சக்தியின் அடையலாம் என்று எடுத்து கொள்ளலாம். ஐந்து தலையுடைய பாம்புகளை இந்து மத கடவுள்கள் வைத்திருக்கிறார்களே அதற்கு என்ன விளக்கம் சொல்ல போகிறீர்கள். என்று சிலர் கேட்பது நமக்கு புரியாமல் இல்லை. நான் மீண்டும் சொல்வது காரணங்கள் இல்லாத காரியங்கள் எதுவுமே இந்து மதத்தில் எப்போதுமே கிடையாது என்பதாகும். ஐந்து தலை பாம்பை உருவகபடுத்தி காட்டுவதற்கு அழகான ஆழமான தத்துவங்கள் இருக்கின்றன.

மனிதன் ஒவ்வொருவனுக்கும் பரிசம், சுவை, பார்வை, நுகர்வு, கேட்டல் என்ற ஐந்து புலன்கள் இருப்பது நமக்கு தெரியும். இந்த ஐந்து புலன்களும் சில புற பொருள்களால் ஈர்க்கப்பட்டு மனிதனை மயக்கமடைய செய்கின்ற போதே அவன் பாவங்களை துணிந்து செய்பவனாக இருக்கிறான்.

**வஞ்சமனத் தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்து அகத்தே நகும்**

என்று வள்ளுவர் மிக அழகாக சொல்கிறார். இப்படி பாவங்களை செய்ய தூண்டும் புலன்களை அடக்கி ஒடுக்கி அடிமையாக வைத்து கொள்ள வேண்டும் என்பதே நமது கடவுள்கள் ஐந்து தலை பாம்பை வைத்திருப்பதன் ரகசியமாகும். ஒரு தலையுடைய பாம்பின் விஷமே பல உயிர்களை போக்கவல்லது என்றால் ஐந்து தலையிலிருந்து வருகின்ற விஷம் எத்தகைய கொடூரமானதாக இருக்கும் என்பதை நினைத்தால் ஐந்து புலன்களின் ஆட்டம் எத்தகைய அழிவை தரும் என்பதை உணர்ந்து கொள்ளலாம். எனவே புலன்கள் ஐந்தும் அடக்கப்பட்டு நமக்கு கருவிகளாக நாம் சொல்வதை செய்யும் பணியாளர்களாக இருக்க வேண்டும் என்பதே இந்துமதம் காட்டும் ஐந்து தலை பாம்பின் தத்துவம்.

எனவே பாம்பு என்பது மண்ணின் ஊர்ந்து செல்லுகின்ற சாதாரண ஜந்துவாக இருந்தாலும் கூட அவற்றிற்குள்ளும் அரிதான விஷயங்களை தேடி போக வேண்டும் அப்படி சென்றால் அற்புதமான மாணிக்க கற்கள் கிடைக்கும் என்பதே இந்து மதத்தில் நாக வழிபாடு கூறுகின்ற நெறிமுறையாகும். நாகம் என்பது நஞ்சியுடையது அதனால் அதை அச்சப்பட்டு வணக்க வேண்டும் என்பதற்காக வந்தது அல்ல பாம்புகளை வணங்கும் பழக்கம் மனிதனை இறைவனோடு சேர்க்கின்ற சக்தியின் வடிவமே பாம்பு தான் எனவே அதை வணங்கினால் யோக நெறி காட்டிய இறை அனுபவத்தை எவர் வேண்டுமானாலும் பெறலாம்.



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
போன்: 09442426434

e-magazine
aanmeegamalar.com

# விக்னம் தீர்க்கும் விநாயகர் சிறப்புகள்




e-magazine
aanmeegamalar.com

எந்த காரியத்தை தொடங்குவதற்கு முன்னும் விநாயகர் வழிபாடு சிறந்த பலனை தரும். விநாயகர் ஒரு கொம்பு, இரு காதுகள், மூன்று கண்கள், நான்கு தோள்கள், ஐந்து கைகள் ஆறெழுத்துக்கள் உடையவர்.

விநாயகர் பூதமாய், தேவராய், விலங்காய், ஆணாய், பெண்ணாய், உயர்திணையாய், அக்திணையாய் எல்லாமாய் விளங்குகிறார். விநாயகர் இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி என்ற மும்மதங்களைப் பொழிகின்றார்.

யானையை அடக்கும் கருவிகள் பாசமும் அங்குசமும், விநாயகர் தன் கையில் பாசாங்குசத்தை ஏந்தி இருக்கின்றார். தன்னை அடக்குவார் ஒருவரும் இலர் என்ற குறிப்பை இதன் மூலம் உணர்த்துகிறார். அகில உலகங்களும் விநாயகருடைய மணி வயிற்றில் அடங்கிடும் என்ற குறிப்பை அவருடைய மத்தள வயிறு புலப்படுத்துகின்றது.

கும்பம் ஏந்திய கை படைக்கும் தொழிலையும், மோதகம் ஏந்திய கை காத்தல் தொழிலையும், அங்குசம் ஏந்திய கரம் அழித்தல் தொழிலையும், பாசம் ஏந்திய கரம் மறைத்தல் தொழிலையும், தந்தம் ஏந்திய கரம் அருளல் தொழிலையும் புரிகின்றன. எனவே விநாயகர், சிருஷ்டி, திதி, சங்காரம், திரௌபவம், அனுக்கிரகம் என்ற ஐம்பெருந் தொழில்களை ஐந்து கரங்களால் புரிந்து ஆன்மாக்களுக்கும் அருள் புரிகின்றார்.

விநாயகர் தாய் தந்தையரை அன்புடன் வழிபட்டதால் பிள்ளை என்ற பெயருடன் ஆர் என்ற பன்மை விகுதி பெற்றுப் பிள்ளையார் என்று பேர் பெற்றார்.

முருகர், அம்பிக்கை ராமர், கிருஷ்ணர் முதலிய உருவங்கள் சிற்ப முறைப்படி செய்து வழிபட வேண்டி யவை. அவை சிற்ப லட்சணத்திற்கு மாறுபட்டிருந்தால் வழிபாடு செய்பவருக்கு நன்மை கிடைக்காது. ஆனால் பிள்ளையார் உருவம் அப்படி அல்ல. மஞ்சளை அரைத்து ஒரு சிறு குழந்தை கூட பிடித்து வைத்தால் போதும் பிள்ளையார் தயார். பிள்ளையார் அவ்வடிவில் எழுந்தருளி அருள்புரிவார்.



சந்தனம், களிமண், மஞ்சள், சாணம் இப்படி எளிதாகக் கிடைக்க கூடிய பொருளில் விநாயகரை செய்து வழிபடுவார்கள். விநாயகருக்கு எளிதாக கிடைக்கக் கூடிய அருகம்புல் மிக விருப்பம். அருகு வைத்து விநாயகரை வழிபட்டால் பிறவிப் பிணி நீங்கி, இன்பம் பெருகும்.

விநாயகருக்கு கரும்பு, அவரை, பழங்கள், சர்க்கரை, பருப்பு, நெய், எள், பொரி, அவல், துவரை, இளநீர், தேன், பயறு, அப்பம், பச்சரிசி, பிட்டு, வெள்ளரிப்பழம், கிழங்கு, அன்னம், கடலை முதலியன வைத்து நிவேதனம் செய்ய வேண்டும்.

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

விநாயக சதுர்த்தி அன்று நாம் பூஜை செய்யும் விநாயகர் சிலை மண்ணினால் செய்யப்பட்டதாக இருக்க வேண்டும். நம் கட்டை விரல் அளவைப் போல பன்னிரண்டு மடங்கு அளவில் இருக்க வேண்டும்.

புரட்டாசி மாத சதுர்த்தி வரை நம் இல்லத்துப் பூஜையில் இருக்க வேண்டும். இந்த 30 நாட்கள் தினந்தோறும் பூஜைகளை முறையாகச் செய்து வருவதுடன் நைவேத்தியங்களும் செய்ய வேண்டும். புரட்டாசி சதுர்த்திக்கு மறுநாள் பூஜை முடிந்து சிலையை நதியிலோ, குளத்திலோ, கடலிலோ அல்லது ஏதாவது நீர்நிலைகளிலோ சேர்த்து விட வேண்டும்.

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்




நமது இதழுக்கு
விருப்ப சந்தா
செலுத்த
விருப்பமுள்ளவர்கள்

UPI மற்றும் வங்கி
வாயிலாகவும்
செலுத்துங்கள்...

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA
(KODAMBAKKAM BRANCH)

e-magazine
aanmeegamalar.com

# ஆன்மிகமலர் மெயில் புக்



## இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க










## aanmeegamalar.com

## இணையதளத்தை பார்க்கவும்










# காசி, அயோத்தியில் ஆன்மிகமலர் விநியோகம்

e-magazine
aanmeegamalar.com













ஆன்மிக மலர் டிரஸ்ட் வெளியிட்ட ஆன்மிக மலர் சிறப்புமலர் புத்தகங்கள் காசி மற்றும் அயோத்தியில் பக்தர்களுக்கு வழங்கபட்டது.

இதில் வாரணாசி என அழைக்கப்படும் காசியில் முக்கிய வீதி நந்தி சர்க்கிள் அருகே மகாதேவ் ஹோண்டம் லூம் ஹவுஸ் பனாரஸ் பட்டு ஜவுளி கடை அதிபர் மற்றும் காசியில் புகழ் பெற்ற நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரம் துணை மேலாளர் சுப்ரமணியன், அயோத்தி மேலாளர் பொறுப்பு பழ.வள்ளியப்பன், பொறுப்பாளர் பாலாஜி மற்றும் காசி அயோத்தி நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரத்தில் தங்கியிருந்த பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

மேலும் காசியில் உள்ள தமிழ் சுற்றுலா வழி காட்டி அன்பர்களுக்கும் ஆன்மீக மலர்.காம் சிறப்பிதழ்கள் வழங்கபட்டது.

சிறப்பிதழ்களை பெற்றுக்கொண்ட அனைவரும் உயர் தரத்திலான அதிக அளவில் ஆன்மிக தகவல்களுடன் சிறப்பாக உள்ளது என்று கூறி நமது இதழைப் பாராட்டினர்.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182



# அமெரிக்காவில் குருவாயூர் கோவில்

e-mag
aanmeegamalar.com

அமெரிக்க கண்டத்தில் நீயூஜெர்சியில் மோர் கன்வில்லே என்ற இடத்தில் மிகப் பெரிய "ஸ்ரீ குருவாயூரப்பன் கோவில்" அமைந்துள்ளது.

"இந்து அமெரிக்கன் டெம்பிள் கல்சுரல்செண்டர்" மூலம் கட்டப்பட்ட இத்திருக்கோவில் "ஸ்ரீகிருஷ்ண மந்திர்" என்றும் பிரபலமாக அறியப்படுகிறது.

31, உல்லிடவுன், மோர்கன்வில்லே, நீயூஜெர்சியில் விரிந்து பரந்த இடத்தில், இயற்கை சூழலின் நடுவில் உள்ள கோவிலின் முன்புறம் உள்ளதக தகக்கும் நெடிதுயர்ந்த துவஜஸ்தம்பமும், சீராக அமைந்த படிகளும், தென்னிந்திய பாணியில் கட்டப்பட்ட ராஜகோபுரமும், அழகிய நீர் ஊற்றுகளும், பூந்தோட்டமும், பின்புறம் உள்ள கோசாலையும் கண்ணுக்கு விருந்தாகவும், மனதுக்கு நிறைவாகவும் உள்ளது. கோவில் வளாகத்தின் அழகும், தூய்மையும் பக்தி அதிர்வுகளை ஏற்படுத்துகிறது.

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

கோவிலின் கீழ்தளத்தில் "கிப்ட் ஷாப்" மற்றும் "ஆடிட்டோரியம்" உள்ளது. முதல் தளத்தில் சன்னதிகள் அமைந்துள்ளது. ஏறிச்செல்ல படிகளும், லிப்ட் வசதியும் உள்ளது. முதல் தளத்தில் நடுநாயகமாக அமைந்துள்ளது

"ஸ்ரீ குருவாயூரப்பன் சன்னதி". மயில் பீலியுடன், மஞ்சள் பட்டு உடுத்தி, ஒளி வீசும் ஆபரணங்களும், வண்ண மலர் மாலைகளும் தரித்து, அழகாக காட்சி தருகிறார் ஸ்ரீ உன்னி கிருஷ்ணன். கணீரென்ற குரலில் அட்சர சுத்தமாக அர்ச்சனை நடக்கிறது. மனதை மயக்கும் சின்ன கிருஷ்ணனை தரிசிப்பது பெரும் பேறு ஆகும்.

குருவாயூரப்பன் சன்னதிக்கு இருபுறமும் சன்னதிகள் உள்ளன.

பிரதட்சணமாக தரிசனம் செய்தால், முதலில் சிவலிங்கம் மத்தியிலும், சுற்றிலும் கணபதி, அம்பிகை, விஷ்ணு, சூரிய மூர்த்தங்கள் உள்ள சன்னதி, காலபைரவர், நவக்கிரகங்கள், ஸ்ரீகன்னிகா பரமேஸ்வரி, ஸ்ரீகாயத்ரி தேவி, உலகாளும் சிவபிரானுக்கும், உலகம்மை அம்பிகைக்கும் தனி சன்னதி, ஸ்ரீதுர்க்கா, ஸ்ரீலஷ்மி, ஸ்ரீசரஸ்வதி மூர்த்தங்கள், 18 படிகளுடன் ஸ்ரீஐயப்பன், ஸ்ரீமகா கணபதி, ஸ்ரீவள்ளி தேவ சேனா சமேத ஸ்ரீசுப்பிரமணியர் சன்னதி என பல சன்னதிகள் உள்ளன. அனைத்து உற்சவ மூர்த்தங்களும், மூஷிக, ரிஷப, மயில் வாகனங் களும் வரிசையாக உள்ளன.

ஸ்ரீகுருவாயூரப்பன் சன்னதியின் மறுபுறம் சீதாபிராட்டியை மடியில் அமர்த்திக் கொண்ட ஸ்ரீபத்ராசல ராமர் ,லஷ்மணர் தனி சன்னதியிலும், ஸ்ரீராதா கிருஷ்ணன் தனி சன்னதியிலும் அருளுகிறார்கள். இங்கு குருவாயூரில் உள்ளது போன்றே பெரிய தாம்பாளத்தில் குந்துமணி வைக்கப்பட்டு உள்ளது.

பக்தர்கள் தங்கள் வேண்டுதல்களை குந்து மணியை களைந்து வேண்டிக் கொள்கிறார்கள்.



e-magazine
aanmeegamalar.com

கலியுக கண்கண்ட தெய்வமான திருமலை ஸ்ரீவேங்கடேசர் தனி சன்னதியில் அருளுகிறார். அழகிய பட்டாடையில், சர்வ அலங்காரத்துடன், ஸ்ரீநிவாசரை தரிசிக்கும் போது மெய் மறக்கிறது. ஸ்ரீநிவாசர் சன்னதியின் ஒருபுறம் ஸ்ரீதேவி மகாலஷ்மியும், மறுபுறம் பூதேவி ஆண்டாளும் சன்னதி கொண்டுள்ளனர். ஸ்ரீசத்யநாராயணருக்கும், அபய அஸ்த ஆஞ்சநேயருக்கும் தனி சன்னதிகள் உள்ளன. ஸ்ரீஅன்னாவரம் சத்ய நாராயண சுவாமி, ஸ்ரீதேவி ,ஸ்ரீபூதேவி சமேத ஸ்ரீமலையப்பர் உற்சவ மூர்த்தங்கள் ,ஸ்ரீலஷ்மி நரசிம்ம உற்சவர், கருட,அனுமந்த, சேஷ வாகனம் என அனைத்தும் வரிசையாக அமைக்கப்பட்டு உள்ளது.

ஸ்ரீகுருவாயூரப்பன் சன்னதிக்கு நேர் எதிரே “துலாபாரம்'' உள்ளது. அனைத்து தெய்வங்களும் ஒன்றாக அருள் பாலிக்கும் இக்கோவிலின் அழகும் தூய்மையும் வர்ணிக்க வார்த்தைகள் போதாது. மன அமைதியுடன் அமர்ந்து படிக்க வசதியாக அனைத்து ஸ்தோத்திர புத்தகங்களும், அனைத்து மொழிகளிலும் அழகாக அடுக்கி வைக்கப்பட்டு உள்ளது. வரும் பக்தர்கள் தங்களுக்கு தேவையான புத்தகத்தை எடுத்து மனம் ஒன்றி படித்து விட்டு, பின் அதே இடத்தில் வைத்து செல்கிறார்கள்.

இந்து அமெரிக்கன் டெம்பிள் மற்றும் கல்சுரல் சென்டர் 1988–ல் துவங்கப்பட்டு, 1995–ல் நிலம் வாங்கப்பட்டு, படிபடியாக திருப்பணிகள் துவங்கி, 2010–ல் பூமிபூஜை செய்து, 2012–ல் விமரிசையாக கும்பாபிஷேகம் நடைபெற்றது. 2013–ல் கோசாலையும், 2014–ல் கிருஷ்ணா போஜன சாலையும் துவங்கப்பட்டது.

ஸ்ரீஇராமர் சேது அணை கட்டிய போது, உதவிய சிறு அணில் போன்று, சாமான்ய மக்களும் தெய்வ திருப்பணியில் பங்கேற்க, “ஒரு சதுர அடி ஸ்பான்சர்” என்ற திட்டம் உள்ளது. இதன்படி விருப்பம் உள்ளவர்கள் 501 டாலர் பணம் செலுத்தி, கோவில் விரிவாக்க பணியில் பங்கு பெறலாம். இவர்களின் பெயர்கள் கோவிலின் கீழ்தளத்தில் உள்ள சுவற்றில் எழுதப்படுகிறது.

இத்திருக்கோவிலில் தினப்படி சேவையாக காலையில் ஸ்ரீவேங்கடேச சுப்ரபாதம், ஸ்ரீகணபதி ஹோமம், ஸ்ரீசுதர்சன ஹோமம், ஸ்ரீகுருவாயூரப்பன் அபிஷேகம், சீவேலி நடத்தப்படுகிறது.

மாலையில் ஸ்ரீசண்டி பாராயணம், ஸ்ரீவிஷ்ணு சகஸ்ரநாம பாராயணம், சாயங்காலம் சீவேலி, மகா மங்களார்த்தி மற்றும் இரவு பூஜை என அனைத்தும் சாஸ்திரப்படி நியமமாக நடத்தப்படுகிறது.

அனைத்து தெய்வங்களும் ஒன்றாக அருளும் இவ்வாலயத்தில் தினம் தினம் திருவிழா தான். அனைத்து நட்சத்திரங்களும், சதுர்த்தி ,சஷ்டி, பிரதோஷம், ஏகாதசி, பௌர்ணமி, என திதிகளும் கோலாகலம் தான்.மாதத்தின் முதல் மற்றும் மூன்றாம் சனிக்கிழமைகளில் ஸ்ரீசத்யநாராயண பூஜா விரதமும், கடைசி சனிக்கிழமைகளில் ஸ்ரீநிவாச திருக்கல்யாணமும் நடைபெறுகிறது.

அமெரிக்க வாழ் இந்திய குழந்தைகளுக்கு அனைத்து கலையும், ஆன்மீகமும், மொழியும், சத்சங்கமமும், இந்திய மண்ணின் பராம்பரியமும் கலாசாரமும் கற்று தரப்படுகிறது. போஜன சாலையில் பரிமாறப்படும் ருசியான உணவால் வயிறும், மனதும் நிறைகிறது.

அமெரிக்க வாழ் அன்பர்களும், அமெரிக்கா செல்லும் அன்பர்களும் “ஸ்ரீகுருவாயூரப்பன்” கோவில் சென்று, உன்னி கிருஷ்ணனையும், அங்கு அருளும் அனைத்து தெய்வங்களையும் தரிசித்து வாருங்கள்!!!

– ஆர்.சுபத்ரா ரங்கநாதன்
Hyderabad-500 036. Telengana

கட்டாய சந்தா இல்லை!

சப்ஸ்கிரைப் இல்லை!!

மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

ஆன்மிகமலர்.காம் வழங்கும்
ஆன்மிகமலர் மெயில் புத்தகம்
ஒரே கிளிக் 180 இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்









aanmeegamalar.com

# டெல்லியில் ஆவணி அவிட்டம்

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

புது டில்லியில் அமைந்துள்ள ஸ்ரீ மீனாட்சி மந்திர் (பி.சி. பிளாக், சாலிமார் பாக்), ஸ்ரீ இஷ்ட சித்தி விநாயகர் கோவில் (மயூர் விஹார், பேஸ் 3), ஸ்ரீராம் மந்திர் (7வது செக்டார், துவாரகா), ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் (சரோஜினி நகர்), தேவி மூகாம்பிகை கோவில், (சி பிளாக், விகாஸ்புரி) ஸ்ரீவிநாயகா கார்த்திகேயா கோயில், (நொய்டா செக்டார் 62) மற்றும் ஸ்ரீ சுப சித்தி விநாயகர் கோவில் (மயூர் விகார் பேஸ் 1), உட்பட பல இடங்களில் ஆவணி அவிட்டம் தினத்தன்று ( ஆகஸ்ட் 19 ) பூணூல் மாற்றும் வைபவம் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

ஆவணி மாத பவுர்ணமி திதியும், அவிட்ட நட்சத்திரமும் இணைந்து வரும் நாள், ஆவணி அவிட்டமாக கொண்டாடப்படுகிறது. இந்த தினத்தில், பழைய பூணூலை மாற்றி, புதிய பூணூல் அணிவர். முறையாக காயத்ரி மந்திரம் உபநயனம் செய்த பிராமணர்கள், இதை மேற்கொள்வர். இந்த சடங்கு முறைக்கு, 'உபாகர்மா' என்று பெயர். உலக நலன், சமுதாய முன்னேற்றம், குடும்ப வளர்ச்சி உள்ளிட்டவைகளுக்காக பிரார்த்தனை செய்து, ஏராளமானோர் புதிய பூணூல் மாற்றினர்.

# புது டெல்லி ஸ்ரீ ஐஸ்வர்ய மகாகணபதி கோவிலில் ஸ்ரீமத் பாகவத சப்தாகம்

ஆடி மாதத்தை ஒட்டி, கேசவபுரத்தில் அமைந்துள்ள ஸ்ரீ ஐஸ்வர்ய மகாகணபதி கோவிலில், ஜூலை 30ம் தேதி முதல் ஆகஸ்ட் 5ம் தேதி வரை ஸ்ரீமத் பாகவத சப்தாகம் நடைபெற்றது. ஸ்ரீ சியாம் சுந்தர் பராசர் சாஸ்திரி இதில் பங்கேற்று பாகவத உபன்யாசம் வழங்கினார்.

"பாகவத சப்தாகம்" என்பது ஸ்ரீமத் பாகவதத்தின் உள்ளடக்கங்களை நன்கு கற்றறிந்த அறிஞரால் ஒரு திட்டவட்டமான கால அட்டவணையுடன் ஏழு நாட்களுக்கு விளக்குவது ஆகும். ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் அல்லது செப்டம்பர் மாதங்களில் கோயிலில் இது நடைபெறும். இதில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். நிகழ்ச்சியை ஆஸ்திக சமாஜம்







aanmeegamalar.com

ஏற்பாடு செய்திருந்தது. அதைத் தொடர்ந்து, ஊக்கத்தொகை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

சமாஜம் கடந்த பல வருடங்களாக கேசவபுரத்தில் உள்ள சில அரசுப் பள்ளியில் படிக்கும் ஏழை மற்றும் திறமையான மாணவ, மாணவியர் களை, சம்பந்தப்பட்ட பள்ளி முதல்வர் கள் மூலம் தேர்வு செய்து, அவர்களை ஊக்குவித்தும் கல்வி உதவித்தொகை வழங்கி வருகிறது. இந்த வருடம், ஆகஸ்ட் 5ம் தேதி சப்தாகம் நிறைவு நாளன்று, 54 மாணவர்களுக்கு தலா ரூ. 3000 உதவித்தொகை வழங்கப்பட்டது. ஸ்ரீ சியாம் சுந்தர் பராசர் சாஸ்திரி இதனை வழங்கினார். ஆஸ்திக சமாஜம் தலைவர் டி. என். சிவராமகிருஷ்ணன் பேசுகையில், இனி வரும் வருடங்களில் 100 மாணவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக சொன் னார். கலந்து கொண்ட அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.



டெல்லி
தியாகராஜன்

–டெல்லி தியாகராஜன்
9868423215

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!



## விநாயகர் புகழ்பாடும் நூல்கள்

ஸ்ரீகச்சியப்ப முனிவர் அருளிய விநாயகக் கவசம், ஸ்ரீவிநாயக சப்தகம், ஷோடச கணபதி துதிகள், ஸ்ரீகணேச புஜங்கம், ஸ்ரீகணேச பஞ்ச ரத்னம், ஸ்ரீகணேச வை கறைத் துதி, அவ்வையார் அருளிய விநாயகர் அகவல், ஸ்ரீகணே ஷாஷ்டகம்.

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

விநாயகருக்கு வெள்ளி விரதம், செவ்வாய் விரதம், சதுர்த்தி விரதம், குமார சஷ்டி விரதம், சங்கடஹர சதுர்த்தி, தூர்வா கணபதி விரதம், சித்தி விநாயக விரதம், துர் வாஷ்டமி விரதம், விநாயக நவராத்திரி விரதம் ஆகிய விரதங்கள் உள்ளன.

# ஆன்மிகத் தகவல்களை

## எளிமையாக, பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில்

# ஆன்மிகமலர் மெயில்

## புத்தகத்தில் (e-book) வெளியிட்டு வருகிறோம்...

free

இதுவரை வெளிவந்த

# 180 க்கும் மேற்பட்ட இதழ்களை



# aanmeegamalar.com

## இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.




# சங்கு புஷ்ப மகிமை

எல்லா மலர்களுமே இறைவனுக்கு நெருக்க மானவைதான் என்றாலும் கூட, சில மலர்கள் இறைவனுக்கு மட்டுமே அர்ப்பணிக்கத் தக்கவை என்ற உயர்ந்த ஸ்தானத்தைப் பெற்று விடுகின் றன.

இவற்றை மனிதர்கள் சூடுவதில்லை. அத் தகைய மலர்தான் சங்கு புஷ்பம்! (Asian pigeon-wings) இறைவனுக்கு மட்டுமே உரித்தான சங்கு புஷ்பத்தை சர்வ சாதாரணமாக எங்கும் காண முடியும்.


இறைவன் எங்கும் நிறைந்திருப்பது போல் சங்கு புஷ்பமும் (butterfly pea) எங்கும் வளர்ந்து, எளிமையாகக் கிடைக்கக் கூடியதாகவே இருக் கிறது.

வெண் சங்கு புஷபமும், நீல நிற சங்கு புஷ்பமும் இனி எங்கு கண்களில் தென் பட்டா லும், சிவனையும் விஷ்ணுவையும் சேர்த்து நினைத்துக் கொள்ளுங்கள்.

வெண் சங்கு புஷபம் சிவனுக் குரியதாகவும்,

நீலநிற சங்கு புஷ்பம் விஷ்ணுவுக்குரியதாகவும் கருதப் படாலும்கூட, நிறம் மாற்றி அர்ச்சித்தாலும் சிவனும் விஷ்ணுவும் கோபித்து கொள்ள மாட்டார்கள்.

சங்கு புஷ்பங்கள் பெண் தெய்வங்களுக் குரியதில்லையா என்ற சஞ்சலமே தோன்ற வேண்டாம்.



அம்பாளுக்கும் உரிய அற்புத மலர்தான் சங்கு புஷ்பம்.

பொதுவாகவே, பௌர்ணமியன்று அம்பாள் ஆராதனை மகா விசேஷம்.

சனிக்கிழமையன்று வரும் பௌர் ணமி தினத் தன்று நீலநிறப் புடவை அல்லது நீலநிற வஸ்திரம் சாத்தி, நீல நிற சங்கு புஷ்பத்தால் அன்னையை அலங்கரித்து அல்லது அர்ச்சனை செய்து, எள்ளு சாதம், தேன் கலந்த பால் ஆகியவற்றை நைவேத் தியமாகப் படைத்து பக்தர்களுக்கு விநியோகித்து வந் தால், தீராத நோய்களும் தீரும் என்பது அநேகம்பேருக்கு தெரியாத ரகசியம்!

– எம் அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி,
திருச்சி, செல்: 9750333265

# மனக் கஷ்டங்கள் போக்கும் ஸ்ரீ தாகம்தீர்த்தபுரீஸ்வரர்

e-magazine
aanmeegamalar.com

வருந்தும் உள்ளங்களுக்கெல்லாம் மருந்தாய் வருபவர் மகேசர் ஒருவரே. மன உளைச்சலால் வாடுபவர் ஒரு நொடி ஈசனை நினைத்தால் போதும். சிறந்த உபாயம் கிடைத்திடும்.

அப்படி ஒரு சமயம் சைவக் குரவர்கள் நால்வருள் முதன்மையானவரான திருஞானசம்பந்தர் வருந்தி நின்றார். அப்போது இறைவன் புரிந்த லீலை யினைக் காண்போமா??

ஆளுடையப் பிள்ளையாரான திருஞானசம்பந்தர் சிதம்பரம், எருக்கத்தம்புலியூர், விருதாச்சலம், பெண்ணாகடம் ஆகிய திருத்தலங்களைத் தொழுது வணங்கி, பாடல் பாடியபின்னர் திருநெல்வாயில் அரத்துறை என்னும் திருவட்டத்துறை திருத்தலத்தை தரிசிக்க வேண்டும் என்று விருப்பம் கொண்டார்.

வழக்கமாக தன் தந்தையார் சிவபாதஇருதயர் தோளில் அமர்ந்து திருத்தலங்களை தரிசிக்கச் செல்லும் ஐந்து வயதே ஆன திருஞானசம்பந்தர் ஏனோ, அரத்துறைநாதரை தரிசிக்க.. சூரியன் வெப்பம் பொழியும் கடுமையான கோடை (வெயில்) காலத்தில் அடியார் கூட்டத்தோடு நடந்தே சென்றார்.

நெடுந்தூரம் நடந்து வந்த குழந்தை சம்பந்தர் மிகவும் களைப்படைந்தார். இரவு நேரம் ஆனதால் இறையூர் என்னும் இந்த மாறன்பாடியில் தங்கினார் சம்பந்தர்பிரான் அடியார்களோடு...

பெருங்கருணை தயாளரான அப்பன் ஈசன் தனது கதாயுதத்தால் ஓர் நீரூற்றை ஏற்படுத்தி, அருமைப் பிள்ளையான சம்பந்தரின் தாகம் தீர்த்ததோடு, வந்திருந்த தனது அடியார்களின் தாகத்தையும் தீர்த்தார். அன்பிற்கினிய அன்னை அன்னபூரணியோ தனது செல்லப் பிள்ளைக்கு அன்னமிட்டு







பசி நீக்கினாள். அடியார்களுக்கும் உணவளித்து, அவர்களின் அரும் பசியையும் போக்கினாள்.

அனைவரும் உறங்கினர். ஆளுடைப்பிள்ளையாரின் கனவில் உதித்த கங்காதரர், திருவரத்துறைக்கு வரும்படி அழைப்புவிடுத்தார். அதோடு, முத்து ( பல்லக்கு ) சிவிகையும், முத்துக்குடையும், முத்துச்சின்னமும் அந்தணர்கள் மூலம் அளித்தருள்வதாக கூறி மறைந்தார். பொழுதும் விடிந்தது. கண் விழித்தார் சம்பந்தர் பெருமான். திருவரத்துறையிலிருந்து முத்துச்சிவிகை (பல்லக்கு), முத்துக்குடை மற்றும் ரிஷப முத் திரை பதித்த பொற்ச்சின்னம் ஆகியவற்றை அந்தணர்கள் மூலம் அனுப்பிவைத்தார் அரத்துறைநாதர்.

அகமகிழ்ந்தனர் சம்பந்தருடன் வந்த அடியார்கள். குளிர்ச்சியான கடல் முத்துக்கள் பதித்த முத்துக் குடையினை ஏந்திய ஞான பிள்ளையார், முத்துப்பல்லக்கினில் அமர்ந்தார்.

அடியவர்கள் முத்துச் சின்னம் ஏந்தியபடி சம்பந்தரை சுமந்தபடி ஹர ஹர கோஷத்துடன் அரத்துறை நோக்கி நகர்ந்தனர்.

கந்தனே சம்பந்தராய் அவதரித்ததாக பல பாடல்களில் எடுத்துக் கூறியுள்ளார் அருணகிரிநாதர். அவ்வகையில் அன்னை பார்வதிதேவி சீர்காழியில் பாலூட்டினாள். அப்பன் ஈசனோ குழந்தை சம்பந்தரின் பூம்பாதம் நோகவிடாமல் மாறன்பாடி என்னும் இவ்விறையூரில் முத்தினால் ஆனவற்றை அளித்து அருள் புரிந்துள்ளார்.



மோ.கணேஷ்

தெய்வச் சேக்கிழார் அருளிய பெரிய புராணத்தில் திருஞானசம்பந்தருக்குஅருளியதாக குறிக்கப்பெறும் மாறன்பாடி என்னும் இத்தலம் தற்போது இறையூர் என்று அழைக்கப்படுகின்றது. நடு நாட்டின் பாடல் பெற்ற தலமான பெண்ணாடத்திற்கும் திருவட்டத்துறைக்கும் இடையே அமைந்துள்ள திருத்தலம். திருஞானசம்பந்தர் வைப்புத் தலமாக பாடிய நான்கு பாடிகளில் ஒன்றாக திகழ்கிறது இத்திருத்தலம். மற்றவை 1.எதிர்கொள்பாடி, 2.திருமழப்பாடி, 3.திருவாய்ப்பாடி ஆகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்று பெருமைகளுடைய இவ்வாலயம் வெள்ளாறு எனப்படும் நீவாநதியின் வடகறையில் அமைந்துள்ளது.

கிழக்கு நோக்கிய ஆலயம் தோரண வாயிலுடன் அமைந்துள்ளது. ஆலயத்தின் வெளியே கணபதி தனியே ஆலயம் கொண்டுள்ளார். விதானத்தின் மேலே... இறைவன் சம்பந்தருக்கு முத்துச்சிவிகை, முத்துக்குடை மற்றும் பொற்ச்சின்னம் அருளிய சுதை வடிவங் கள் அழகுற வடிக்கப்பட்டுள்ளது. எதிரே திருஞானசம்பந்தர் தனிச் சன்னதியில் கையில் பொற்றாளத்துடன் கற்சிலையாக கவினுற காட்சி தருகின்றார்.

உள்ளே... நேராக நந்தி, பலிபீடம், கடந்து சன்னதிக்குள்

e-magazine
aanmeegamalar.com







நுழைகின்றோம். நேராக சிறிய அளவிலான மகாமண்டபம், அர்த்த மண் டபம் மற்றும் கருவறை. கருவறையுள் கருணா மூர்த்தியாக அருள்மழை பொழிகின்றார் ஸ்ரீ தாகம்தீர்த்தபுரீஸ்வரர். சதுர ஆவுடையாரின் நடுவே வழவழ பச்சைக்கல்லால் ஆன லிங்கத் திரு மேனியராய்த் திகழ்கின்றார்.

இவரின் அற்புத மகிமைகளை நினைந்துருகி, வணங்கிய பின்னர், மகா மண்டபத்தினை அடைந்திட.... தென்புறமாக அருளாட்சி புரிகின்றாள் ஸ்ரீ அன்னபூரணி அம்மன். மேலிரு கரங்களில் பாசாங்குசம் ஏந்தி, கீழிரு கரங்களை அபய விரத அஸ்தமாகக் கொண்டு மெல்லிய புன்சிரிப்புடன் அருள்மாரி பொழிகின்றாள். அன்னத்தை குறைவில்லாமல் தந்து பசிதீர்ப்பவள் இவ்வன்னை.

அன்னையை வணங்கி, ஆலய வலம் வருகையில் முறையான சிவகோஷ்ட தெய்வங்களைக் காண்கிறோம். ஒரு சுற்றுடைய சிறிய ஆலயம். தென்மேற்கில் கணபதியும், மேற்கில் வள்ளி தெய்வானை உடனான ஸ்ரீ சுப்பிரமணியரும் சன்னதி கொண்டுள்ளனர்.

இங்கே திருமாலின் சிலையும் காணப்படுகிறது. வாயுபாகத்தில் கஜலட்சுமி சன்னதி கொண்டு திகழ்கின்றாள். தென் சுற்றில் நால்வர் தரிசனம். ஈசான திசையில் நவக்கிரகங்கள், தனி சனீஸ்வர், மற்றும் பைரவர் வீற்றருள்கின்றனர். சிறிய ஆலயம் எனினும் தூய்மையாக காணப்படுகிறது. அதனால் மன நிறைவும் ஏற்படுகின்றது.

தல விருக்ஷமாக பலாமரம் திகழ்கிறது. தல தீர்த்தமாக ஆலயத்தின் எதிரே சிவபெருமான் தனது ஆயுதங்களில் ஒன்றான கதாயுதத்தால் தோற்றுவித்த தான்தோன்றி தீர்த்தம் சிறிய அளவில் உள்ளது.

வருடா வருடம் மாசி மகத்தன்று சம்பந்தருக்கு முத்தினால் ஆனவற்றை அளித்ததன் நினைவாக இவ்வாலயத்தில் சம்மந்தருக்கு அபிஷேக அலங்கார ஆராதனைகள் செய்யப்பட்டு, பல்லக்கில் வைத்து திருவரத்துறைக்கு செல்லும் சம்பிரதாய விழா முக்கிய விழாவாக அனுசரிக்கப்படுகின்றன. அன்றைய தினம் இவ்விறையூர் ஈசனுக்கும், அம்பாளுக்கும் அபிஷேக ஆராதனைகள் விமர்சியாக நடக்கும். அதோடு, இங்கு வரும் சிவனடியார்களுக்கு அன்னமளிப்பு நிகழ்வு மிகச்சீரும் சிறப்புமாக நடந்தேறும்.

இங்கு சிவன் பார்வதிக்கு அபிஷேகம் செய்து, புது வஸ்திரம் சாற்றி, வாசனை புஷ்பங்களாலும், வில்வத்தாலும் அர்ச்சனை செய்து வழிபட....சகல மனக் கஷ்டங்களும் நீங்கி வாழ்வில் சந்தோஷம் பெருகும்.

தினமும் காலை 8 மணி முதல் 12 மணி வரையும், மாலை 4 மணி முதல் 8 மணி வரை ஆலயம் திறந்திருக்கும்.

கடலூர் மாவட்டம், விருத்தாச்சலத்தில் இருந்து திட்டக்குடி செல்லும் பேருந்து சாலையில் சுமார் 22 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது இறையூர் ஸ்ரீ தாகம் தீர்த்தபுரீஸ்வரர் ஆலயம். சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள இராமநத்தத்திலிருந்து 23 கிலோமீட்டர் தூரத்தில் விருதாச்சலம் செல்லும் வழியில் இவ்வூர் அமைந்துள்ளது.

பழங்காமூர் மோ.கணேஷ்.
தொடர்புக்கு: 9789156179.

e-magazine
aanmeegamalar.com

# ஆன்மிக சேவையை பாராட்டலாம் வாங்க...

**பஜன்மண்டலியினர்,**

**ஆன்மிக சேவை செய்யும் அன்பர்கள்,**

**ஆன்மிக அமைப்புகள், உழவாரப்பணி,**

**கோவில் திருவிழாக்களில் சேவையாற்றும் அன்பர்கள்,**

**அன்னதானம் செய்பவர்கள்,**

**பல்வேறு ஆன்மிகபணி செய்யும் ஆன்மிக அன்பர்கள்**

மேற்கண்ட ஆன்மிக பணியை விரும்பி செய்யும் அன்பர்கள் தங்களைப் பற்றியும், தங்களது சேவையைப் பற்றியும் எங்களுக்கு தெரியப்படுத்தவும், தாங்கள் செய்யும் சேவையை புகைப்படத்துடன் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துவோம்,

உங்களுடன் இணைந்து பணிசெய்ய விரும்பும் அன்பர்களுக்கு நமது ஆன்மிகமலர்.காம் இணையதளமும், இணையதள இதழும் பாலமாக செயல்படும்,

கீழ்காணும் வாட்சப் எண்ணிற்கு தெரியப்படுத்தவும், அல்லது தொடர்பு கொள்ளவும்.

**வாட்சப் எண்: 9444228203**

# நொய்டா கோவிலின் நான்கு நாட்கள் துவக்க விழா



மூன்றாம் ஆண்டு துவக்கத்தை முன்னிட்டு, நொய்டாவின் செக்டார் 62 ல் அமைந்துள்ள ஸ்ரீ விநாயகா மற்றும் ஸ்ரீ கார்த்திகேயா கோவில் வளாகத்தில், வேதிக் பிரச்சார் சன்ஸ்தான் நிர்வாகம், ஆகஸ்ட் 24 முதல் 27 கோலாகல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தது.

வேத மந்திரங்கள் முழங்க, கணபதி ஹோமத்துடன் நான்கு நாட்கள் விழா தொடங்கின. தொடர்ந்து நவகிரக ஹோமம், ஸ்ரீ சுப்ரமணிய ஹோமம், ருத்ர ஏகாதசி, திருப்புகழ் அன்பர்கள் வழங்கிய திருப்புகழ் பாடல்கள், ஸ்ரீ சுப்பிரமணியர் லட்சார்ச்சனை, ஸ்ரீமத் பாகவத பாராயணம், பக்தர்கள் வழங்கிய ஸ்ரீ கிருஷ்ணருக்கு பஜனை நடந்தது. நிறைவு நாளில், ராமர் சுதர்சன ஹோமம், திரிபுர சுந்தரி அம்பாள் ஹோமம், அனைத்து சந்நிதிகளுக்கும் அபிஷேகம், மற்றும், மாலையில் ஆஞ்சநேய உற்சவம், அனுமன் சாலிசா பாராயணம், ஸ்ரீ சாந்த ஆஞ்சநேயருக்கு வடை மாலை சாத்துதல் ஆகியவற்றுடன் நிகழ்ச்சிகள் நிறைவடைந்து. அனைத்து நாட்களிலும் மகா தீபாராதனையுடன், பக்தர்களுக்கும் மகா பிரசாதம் வழங்கப்பட்டது. பூஜைகளை ஆஸ்தான பண்டிதர்கள் : ஸ்ரீ ஸ்ரீராம் மற்றும் ஸ்ரீ ஷங்கரின் வழிகாட்டுதலின் கீழ், கோயில் அர்ச்சகர்கள் ஸ்ரீ மணிகண்டன் சர்மா மற்றும் ஸ்ரீ மோஹித் மிஸ்ரா தவிர பதினொரு அர்ச்சகர்கள் கொண்ட குழுவின் உதவியுடன் நடந்தன.

இந்நிகழ்ச்சியில், ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாம மண்டலி பெண்கள் பிரிவு, நன்கொடையாளர்கள், ஸ்பான்சர்கள், தன்னார்வலர்கள், உறுப்பினர்கள், ரவி சர்மா, பாலாஜி, ராஜு அய்யர், ராமசேஷன், ராஜேந்திரன், தவிர, வெங்கட்ராமன்,

e-magazine
aanmeegamalar.com







ஆர்.பழனிவேல் மற்றும் பராமரிப்பு ஊழியர்களுக்கும், கோயில் நிர்வா கத்தினர் நன்றி தெரிவித்தனர்.

'நொய்டா முருகன் கோவிலின்' என்று பிரபலமாக அறியப்படும் இந்த செக்டார் 62நொய்டா கோயில், 10,000 சதுர அடி நிலத்தில் கட்டப்பட்டது. ஸ்ரீ விநாயகா மற்றும் ஸ்ரீ கார்த்திகேய கோவில் மகா கும்பாபிஷேகம், 21, ஆகஸ்ட் 2022 அன்று நடைபெற்றது. ஒத்த எண்ணம் கொண்ட பக்தர்க ளால் தொடங்கப்பட்ட வேதிக் பிரச் சார் சன்ஸ்தான், முப்பத்தைந்து ஆண்டு களுக்கு மேலாக பக்தர்களுக்கு சேவை செய்து வருகிறது, என்பது குறிப்பிடத்தக்கது.



எஸ்.வெங்கடேசன்

# ஸ்ரீ சூரிய நமஸ்கார பூஜை - ஆராதனை

ஸ்ரீ சூரிய நமஸ்கார பூஜை மற்றும் ஆராதனை காலையில் கலச ஸ்தாபனத்துடன் செக்டர் 62 ஸ்ரீ விநாயகா மற்றும் ஸ்ரீ கார்த்திகேய கோவில் வளாகத்தில் தொடங்கின. தொடர்ந்து அனுக்ஞை, கணபதி பூஜை, சங்கல்பம், சூரியமஸ்காரம், நவக்கிரக ஜபம், மற்றும் உபநிஷத் பாராயணம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பக்தர்கள் ஓம் நமோ நாராயணா என்று கோஷமிட்டவாறு காணப்பட்டனர். நிறைவில் பக்தர்களுக்கு பிரசாதம் வினியோகம் செய்யப்பட்டது. இந் நிகழ்ச்சியை ஸத்வித்யா ப்ரதி ஷ்டானம், நொய்டா, வேதிக் பிரச்சார் சன்ஸ்தானுடன் இணைந்து நடத்தினர். ஸ்ரீ சூரிய நமஸ்கார நிகழ்ச்சியை வெற்றிகரமாக ஏற்பாடு செய்ததற்காக, சத்வித்யா பிரதிஷ்டானத்தின் குழுவிற்கும், மேலும் குழு உறுப்பினர்கள்: ராஜு ஐயர், ரவி சர்மா, ராமசேஷன், விஸ்வநாதன், ராஜேந்திரன் மற்றும் வெங்கடராமன் ஆகியோயோருக்கு க்ஷிறிஷி நிர்வாகம் நன்றி தெரிவித்தது .

– எஸ்.வெங்கடேசன், நொய்டா

தொடர்பு எண்: 9811161370

# தோல்வி வரும் போது அறிவு உன்னிடமிருந்து அகலும்

சீடன்: கேள்வி கேட்பது தவறா?

ஞானி: கேள்வி கேட்டபின் சிந்தனையாக மாறினால் தவறல்ல.

சீடன்: சிந்தனை மட்டும் போதுமா?

ஞானி: போதாது. நிலை நிறுத்த முடியும் என்ற விஷயங்களைச் செய். முடியாத விஷயங்களை எப்படி முடிக்க வைக்க முடியும் என்று சிந்தி.

சீடன்: யார் முடிவு எடுக்க மாட்டார்கள்?

ஞானி: ஆசை உள்ள மனிதன்.

சீடன்: கடவுள் உருவத்தை ஏன் எடுத்தான்?

ஞானி: உலகிலுள்ள மாயையை அகற்ற.

சீடன்: பற்றறுத்தல் என்பது என்ன?

ஞானி: பற்றுக் கோடான இறைவனைப் பிடிப்பது.

சீடன்: முடிவு என்பது என்ன?

ஞானி: ஓயாமல் சுழன்று கொண்டிருக்கும் செயல்.

சீடன்: எதற்கு சிந்திக்க வேண்டும்?

ஞானி: சிறப்பான பொருளை தெரிந்து கொள்ள.

சீடன்: குருவை எப்போது புரிந்து கொள்ள முடியும்?

ஞானி: அன்பு என்ற தொடர்பு இருக்கும்போது.

சீடன்: பெரும்பாலோர்க்கு அது ஏன் முடிவதில்லை?

ஞானி: வெறும் உணர்ச்சிகளால் செயல்படுவதால்.

சீடன்: கடவுள் நிதர்சன உண்மையா?

ஞானி: ஆம். தெரிந்த விஷயம்மறைந்திருந்தாலும் உண்மையே.

சீடன்: அநேகர் மஹான்களின் எழுத்துக்களைப் படிப்பதில்லலயே?

ஞானி: படித்தால் எழுதுவேன் என்பது இலக்கணமில்லை.

சீடன்: ரகசியம் என்பது என்ன?

ஞானி: சீக்கிரமாக ஒரு விஷயத்தை அடையும் முறை.

சீடன்: பூஜை சிந்திக்காமல் போவதுஎப்பொழுது?

ஞானி: மனமே இல்லாமல் செய்யும்போது.

சீடன்: அனுஷ்டானம், பூஜை வித்தியாசம்என்ன?

ஞானி: அனுஷ்டானம் மனதிற்குள் செய்வது. பூஜை வெளிப்படையாக செய்வது.

சீடன்: பக்தி என்பதற்கு ஒரு விளக்கம் தேவை சுவாமி?

ஞானி: உக்கிர நரசிம்மன் வெளிவரும்போது அவனை எவ்வளவு அழகாய் இருக்கிறான் என்று உண்மையில் உணர்ந்து உருகினானே பிரகலாதன், அதுதான் பக்தி.

சீடன்: அபிப்பிராய பேதம் வரலமா?

ஞானி: கல்வியில் வந்தால் முன்னேற்றம், உலக விஷயங்களில் வந்தால் தண்டம்.

சீடன்: சண்டைகளுக்கு காரணமென்ன?

ஞானி: திறமையின்மை.

சீடன்: சுயமரியாதை என்றால் என்ன?

ஞானி: ஒவ்வொரு விஷயத்திலும் உங்கள் அபிப்ராயம் எதுவோ அதுவே.

சீடன்: மனிதனுக்கு எது தேவை?

ஞானி: தானாக இயங்குகின்ற சிந்தனை திறன்.

சீடன்: இறைவனிடம் அடிமையாக இருக்கலாமா?

ஞானி: அது பக்தனின் அடை யாளம்.

சீடன்:துன்பம் எப்பொழுதுஅறியும்?



ஞானி: அதன் மூலம் தெரியும் போது.

சீடன்: குரு என்பவன் யார்?

ஞானி: துன்பத்தைப் போக்காமல் துன்பத்தைப் போக்கும் வழியைக் காட்டுபவன்.

சீடன்: பிரார்த்தனைகள் எப்பொழுது வருகிறது?

ஞானி: பருவம் தப்பிய காலங்களில் எண்ணும் எண்ணங்

e-magazine
aanmeegamalar.com
ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்



ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன்**
**C.V. நடராஜன்**
செல்: 9444228203

♦♦♦

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622

♦♦♦

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல்

♦♦♦

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் இணையலாம்

**ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.**

தொடர்பு கொள்ளவும்
**9444228203**



e-magazine
aanmeegamalar.com


களில்.

சீடன்: எது ஆண்மையற்ற தன்மை?

ஞானி: வீரனுக்கு வரும் கலக்கம்.

சீடன்: எது அறிவு?

ஞானி: உயிர் வேறு உடல் வேறு என எண்ணுவது.

சீடன்: அறிவை எதற்கு உபயோகப்படுத்த வேண்டும்?

ஞானி: பலன் எதிர்பாராத கடமையைச் செய்ய.

சீடன்: அறிவு கடவுளைப் புறக்கணித்தால்?

ஞானி: உடலோடு ஒட்டிய ஆணவமும் கர்வமும் மிஞ்சும்.

சீடன்: அதனால் என்ன கெடுதல்?

ஞானி: தோல்வி வரும்போது அறிவு உன்னிடமிருந்து அகலும்.

சீடன்: உண்மையை அறிய என்ன செய்யவேண்டும்?

ஞானி: இறைவனை பற்றி படிக்க வேண்டும்.

சீடன்: உலகைக் கண்டு பயப்படுபவன் யார்?

ஞானி: கோழை. விவேகி அல்ல.

சீடன்: உலகில் உயர்ந்தவன் யார்?

ஞானி: கடமையை நிகழ்த்திய மனிதன்.

சீடன்: யார் உண்மையான விவேகி?

ஞானி: வாழ்வு என்ற குறுகிய வியாபாரக் காலத்தை உணர்ந்தவன்.

சீடன்: இறைவனின் எண்ணத்தில் யார் உயர்ந்தவன்?

ஞானி: கர்மம் என்ற தொழில் செய்யும் பாதையில் நடப்பவன்

சீடன்: அப்படியானால் தொழிலே தெய்வமா?

ஞானி: தன்னை முழுமையாக ஆட்படுத்திக் கொண்டால்.

சீடன்: மனிதனின் இயற்கை உணர்வு எது?

ஞானி: அழியாத உயிரின் நினைவு

சீடன்: கடவுளையே தொழிலாக நினைத்தால்?

ஞானி: முயலாமல் தவம் செய்யாமல் அவனே வளருவான்.

சீடன்: யார் கடவுளை அறியாதவன்?

ஞானி: வெறும் சொல்லினால் ஞானம் பேசுபவன்.

சீடன்: பலன்களை எதிர்ப்பார்க்காமல் இருந்தால்?

ஞானி: பற்று விட்டுவிடும்.

சீடன்: பற்று விட்டுவிட்டால்.

ஞானி: பயன் கிட்டிவிடும். கடவுளே வருவான்.

சீடன்: சற்று குழப்பமாக உள்ளதே?

ஞானி: (சிரித்தபடி) கேள்வி கேட்டே ஞானத்தை அடைய முடியாது. குருவிடம் சரணடை. மார்க்கம் புரியும்.

ஞானச்சேரி ஞானிகள்

பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
அழகுராஜா
எஸ்.மகாதேவன், போன் 098410 28028



# 32 விநாயகர்களின் சிறப்புகள்

**1. ஸ்ரீபால விநாயகர்:** குழந்தை வடிவம், யானைத்தலை;பொன்னிற மேனி;நான்கு கைகளில் ஒன்றில் வாழைப்பழம்,ஒன்றில் மாம்பழம்,ஒன்றில் கரும்பு, ஒன்றில் பலாப்பழம், துதிக்`கை’யில் அவருக்கு பிடித்த கொழுக்கட்டை.

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

**2.ஸ்ரீ தருண விநாயகர் :** இளமை பொங்கும் அழகிய இளைஞனாக,ஒடிந்த தந்தம், விளாம்பழம், கரும்புத்துண்டம், அங்குசம், பாசம், நெற்கதிர்,நாவற்பழம்,மோதகம் தாங்கிய எட்டு கைகளும் கொண்ட சிவந்த மேனியர்.

**3.ஸ்ரீ பக்தி விநாயகர் :** அறுவடை கால முழு நிலவு போல் ஒளிரும் சாம்பல நிற மேனியர்; வாழைப்பழம், மாம்பழம்,தேங்காய்,கிண்ணம் நிறைய பாயசம் கொண்ட நான்கு கைகள்.

**4.ஸ்ரீ வீர விநாயகர் :** வல்லமை வாய்ந்த மாவீரர் போல் அனைவரையும் கவர்ந்தீர்க்கும் வகையில், நின்ற நிலையில் அம்பு அங்குசம், மழு, குந்தாலி, சம்மட்டி, சூலம்,வாள்,சக்கரம், சங்கு, கேடயம், கதை, கொடி, பாசம், நாகம், வேல்,வில் கொண்ட பதினாறு கரங்கள் கொண்ட சிவந்த மேனி.

**5.ஸ்ரீ சக்தி விநாயகர் :** தனது சக்தியரில் ஒருவரை மடியில் அமர்த்திஇடது கீழ்க்கரத்தால் அணைத்த வண்ணம் உட்கார்ந்த நிலையில் அங்குசம் பாசம் ஏந்தி வலது கீழ்க்கரத்தால் அபயம் அளிக்கும் நான்கு கரமுடைய ஆரஞ்சு சிவப்பு மேனியர்.

**6.ஸ்ரீ துவிஜ விநாயகர்:** நான்கு முக வெண்ணிலவு வண்ண மேனி, அக்கமாலை, தண்டம், கமண்டலம்,ஏடு ஏந்திய நான்கு கரங்கள்.

**7.ஸ்ரீ சித்தி விநாயகர்:** எடுத்ததை முடித்து வைக்கும் பொன் மஞ்சள் நிற மேனி, மாம்பழம், பாசு,கரும்புத்துண்டம், மலர்க்கொத்து கொண்ட நான்கு கரங்கள், துதிக்கையில் எள்ளுருண்டை.

**8.ஸ்ரீ உச்சிஷ்ட விநாயகர்:** பேரின்பம் அருளும் பண்பாட்டு காவலர், நீல நிற மேனி, தனது சக்தியுடன் வீற்றிருக்கும் இவர் அக்கமாலை, மாதுளம் பழம், வஜ்ஜிர திரிசூலம், நீலோற்பலம், நெற்கதிர், வீணை தாங்கிய ஆறு கரங்கள்.

**9.ஸ்ரீ ஷிப்ர விநாயகர்:** வரந்தரு விநாயகரான இவர் தந்தம், அங்குசம், பாசம், கற்பகக்கொடி நான்கு கரங்களில் தாங்கியிருப்பார் துதிக்கையில் இரத்தின கும்பம் கொண்ட வண்ன மேனி.

**10.ஸ்ரீ விக்ன விநாயகர்:** விக்கினங்களின் அதிபதி. தந்தம், மலரம்பு, பரசு, சக்கரம், சங்கு, பாசம், கரும்புவில், பூங்கொத்து ஏந்திய எட்டு கரங்கள். துதிக்கையில் கொழக்கட்டையை வைத்திருக்கும் பொன்னிற மேனி.

**11.ஸ்ரீ ஹரம்ப விநாயகர்:** சிங்க வாகனத்தில் அமர்ந்திருக்கும் ஐந்து முக வெண்ணிறமேனி. அபயகரம், தந்தம், மலர்மாலை, அக்கமாலை, சுத்தி, பாசம், பழம், கதை, கொழக்கட்டை கொண்ட பத்து கரம்.

**12.ஸ்ரீ லட்சுமி விநாயகர்:** வெற்றியைத் தருபவர்; நீல மலர் ஏந்திய இருதேவியர்களுடைய தூய வெண்ணிற மேனியர்; பச்சைக்கிளி, மாதுளம் பழம், வாள், அங்குசம், பாசம், கற்பகக் கொடி, மாணிக்கக்கும்பம், வரம் தரும் கரம் கொண்ட எட்டு கரங்கள்.

**13.ஸ்ரீ மகர விநாயகர்:** மூன்று கண்களுடன் நெற்றியில் பிறைச் சந்திரன் ஒளிர, சிவப்பு வண்ணத்தோற்றம். தந்தம், மாதுளம்பழம், நீலோற்பலம், நெற்கதிர், சக்கரம், பாசம், தாமரை, கரும்புவில், கதை ஆகியவற்றைத் தாங்கிய ஒன்பது கரங்கள், தாமரை ஏந்திய கையுடன் கூடிய

சக்தியை பத்தாவது கையில் தழவிக்கொண்டு துதிக்கையில் ரத்தின கலசம்.

**14.ஸ்ரீ விஜய விநாயகர்:** மூஷிக வாகனத்தில் அமர்ந்திருக்கும் வெற்றியைத் தரும் செந்நிற மேனி, தந்தம், அங்குசம், பாசம், மாம்பழம் தாங்கிய நான்கு கரங்கள்.

**15.ஸ்ரீ நிருத்திய விநாயகர்:** ஊன்றிய இடது கால்,தூக்கிய வலது கால், கற்பக விருட்சத்தனடியில் ஆனந்த நடனமாடும் பொன்னிற மேனி. தந்தம், அங்குசம், அபிநயம் காட்டுவது போலுள்ள உயர்த்திய கையிலே பாசம், கொழக் கட்டை கொண்ட நான்கு கரங்கள்.

**16.ஸ்ரீ ஊர்த்துவ விநயகர்:** இடது மடியில் அமர்ந்திருக்கும் பச்சை நிறமுடைய தேவியை அணைத்த வண்ணமுள்ள பொன்னிற மேனி. தந்தம், அம்பு, செங்கழுநீர்மலர், நெற்கதிர், கரும்புவில்,தாமரை மலர் கொண்ட ஆறு கரங்கள்.

**17.ஸ்ரீ ஏகாட்சர விநாயகர்:** பிறை சூடி, முக்கண்ணனுடன் செம்பட்டுடையும், செம்மலர் மாலையும் அணிந்து குட்டைக் கை கால்களை கொண்டு பத்மாசன நிலையில் மூஷிக வாகனத்தில் அமர்ந்திருக்கும் செந்நிற மேனி, மாதுளம் பழம், அங்குசம், பாசம், கொண்ட நான்கு கரங்கள்.

**18.ஸ்ரீ வரத விநாயகர்:** வரம் தரும் பிறைசூடிய முக்கண், செந்நிற மேனி, தேன்கிண்ணம், அங்குசம், பாசம், துவஜம் கொண்ட நான்கு கரங்கள்.

**19.ஸ்ரீ திரயாட்சர விநாயகர்:** ஆடும் காதுகளில் சாமரம் எனும் அணிகளும், தந்தம், அங்குசம், பாசம், மாம்பழம் கொண்ட நான்கு கரங்கள். தும்பிக்கையில் கொழக்கட்டை பொன்னிற மேனி.

**20.ஸ்ரீ ஷிப்ர பிரசாத விநாயகர்:** பிறையுடையாடை, முக்கண் கொண்ட சிவந்த மேனி, தந்தம், தாமரை, அங்குசம், பாசம், கற்பகக் கொடியுடன் ஆறு கரங்கள். துதிக்கையில் மாதுளம் பழம்.

**21.ஸ்ரீ ஹரித்ரா விநாயகர்:** மஞ்சள் ஆடையுடைய பொன்னிற மேனி. தந்தம், அங்குசம், பாசம், மோதகம் கொண்ட நான்கு கரங்கள்.

**22.ஸ்ரீ ஏகதந்த விநாயகர்:** பெருத்த வயிறு, ஒற்றைத் தந்தம், அக்கமாலை, கோடரி, லட்டு கொண்ட நான்கு கரங்களைக்கொண்ட நீல மேனி.

**23.ஸ்ரீ சிருஷ்டி விநாயகர்:** தந்தம், அங்குசம், பாசம், மாம்பழம். கொண்ட நான்குகரங்கள். செந்நிற மேனியில் பெருச்சாளி வாகனம்.

**24.ஸ்ரீ உத்தண்ட விநாயகர்:** வலது கையில் தாமரை ஏந்தியுள்ள பச்சை நிற தேவியை இடது கையால் அணைத்துள்ள செந்நிற மேனி. த்ந்தம், மலர்மாலை, தாமரை, கதை, பாசம்,நீலோற்பலம்,நெற்கதிர், கரும்புவில், மாதுளம்பழம் கொண்ட ஒன்பது கரங்கள் துதிக்கையில் ரத்ன கும்பம்.

**25.ஸ்ரீ ருணமோகன விநாயகர்:** செம்பட்டுடுத்தி வெண்பளிங்கு நிறம் கொண்டவர். தந்தம், அங்குசம், பாசம், நாவற்பழம் ஏந்திய நான்கு கரங்கள்.

**26.ஸ்ரீ துண்டி விநாயகர்:** நின்ற கோலத்தில் காட்சியளிக்கும் செந்நிற மேனி. தந்தம், அக்கமாலை, கோடரி, ரத்தின பாத்திரம் தாங்கிய நான்கு கரங்கள்.

**27.ஸ்ரீ இருமுக விநாயகர்:** இரு முகம், செந்நிற ஆடை, ரத்தின கீரிடம், நீலநிற மேனி. தந்தம், அங்குசம், பாசம், ரத்தின பாத்திரம் கொண்ட நான்கு கரங்கள்.

**28.ஸ்ரீ திரிமுக விநாயகர்:** அபயம், அக்கமாலை, அங்குசம் உள்ள மூன்று வலது கரங்கள், பாசம், அமுத கலசம், வரதம் மூன்று இடது கரங்கள், தங்க தாமரை பீடத்தில் அமர்ந்திருக்கும் செந்நிற மேனி.

**29.ஸ்ரீ சிங்க விநாயகர்:** சிங்க வாகனத் தில் அமர்ந்துள்ள வெண்ணிற மேனி. வரதம்,வீணை, சிங்கம், கற்பகக்கொடி கொண்ட நான்கு வலக்க்ரங்கள், தாமரை, மலர்க்கொத்து, ரத்தின கவசம், அபயம் கொண்ட நான்கு கரங்கள்.

**30.ஸ்ரீ யோக விநாயகர் :** யோக ஆசனத்தில் யோக பட்டம் கட்டிக்கொண்டு யோக தண்டம், அக்கமாலை, பாசம், கரும்பு தாங்கிய நான்கு கரங்கள், நீல நிற ஆடை அணிந்த பால சூரிய நிறம்.

**31.ஸ்ரீ துர்க்கா கணபதி:** அம்பு, தாமரை, அக்கமாலை, அங்குசம், பாசம், அஸ்திரம், கொடி, வில் ஆகியவற்றை எந்திய எட்டு கரங்கள் செந்நிற ஆடையுடைய பொன்னிறம்.

**32.ஸ்ரீ சங்கட ஹர விநாயகர்:** துயரங்களைப் போக்குபவர், நீல ஆடை அணிந்த பால சூரியன் போன்ற நிறம். இடது மடியில் நில மலரை ஏந்திய பச்சை மேனியுடைய தேவியை அமர்த்தியிருப்பவர். வரதம் அங்குசமுடைய வலக்கரம், பாசம், பாயச பாத்திரமுடைய இடக்கரம்.

e-magazine
aanmeegamalar.com

# ஆன்மிகமலர்.காம்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

FREE

# 180 e-books

## 1000–க்கணக்கான ஆன்மிக செய்திகள்

eBook FREEDOWNLOAD

முற்றிலும் இலவசம்
எந்தவித மறைமுக
கட்டணமும் இல்லை




பாருங்கள்... டவுன்லோடு
செய்து படியுங்கள்...

## aanmeegamalar.com




தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com

# ஆன்மீக வழியில் அமைதி



அகங்காரம், பொறாமை, விருப்பு, வெறுப்பு, சுயநலம் போன்றவை நம்மிடம் அணுகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அமைதியை விரும்புவர்கள் அகங்காரம், பொறாமை போன்றவற்றை முற்றிலும் தவிர்க்க வேண்டும். அதற்கு ஆன்மிகம் மிகவும் துணை புரிகிறது. ஒரு முறை திரிலோக சஞ்சாரி நாரதர் திருமாலிடம் சுவாமி தங்கள் திருநாமத்தை அதிகம் உச்சரித்துக்கொண்டு இருப்பவன் நான்தான் என்று கூறினார். திருமால் நாரதரின் அகங்காரத்தை நீக்க வேண்டும் என்று திருவுள்ளம் கொண்டார். அவர் நாரதரே என்னோட நாமத்தை உன்னைவிட அதிகமாக உச்சரிப்பவர் பூலோகத்தில் ஒருவர் இருக்கிறார் அவரை உனக்கு காட்டுகிறேன் என்று நாரதரை பூலோகம் அழைத்துச் சென்றார்.


இருவரும் ஒரு விவசாயி இல்லத்திற்கு சென்று, அந்த விவசாயின் செயல்பாடுகளை மறைந்து நின்று கவனித்துக்கொண்டிருந்தனர். அந்த விவசாயி காலை எழுந்தவுடன் 'நாமோ நாராயணா இன்றையபொழுது நல்ல பொழுதாக கழிவதற்கு அருள் புரிவாயாக' என்று இரு கைகளால் வணங்கி வேண்டிக்கொண்டார். அவன் அதன் பிறகு காலைக்கடன்களை முடித்துவிட்டு, அவன் மனைவி மக்களுக்கு வேண்டிய தன்னோட கடமைகளைச் செய்தான்.

தொழுவத்தில் கட்டியிருந்த மாடுகளை அழைத்துக்கொண்டு ஏர் கலப்பையுடன் வயலுக்குச் சென்று உழுதான். மதியம் மனைவி கொடுத்து அனுப்பிய கஞ் சியை சாப்பிட்டுவிட்டு மீண்டும் வயலில் உழ ஆரம்பித்தான். பகல் பொழுதெல்லாம் அவனுக்கு வயலில் கழிந்தது. அவன் வேலையெல்லாம் முடித்து விட்டு இரவு அவன் வீட்டில் படுக்கப்போகும்போது 'நமோ நாராயணா இன்னிக்கிப் பொழுது நன்றாக கழிந்தது. நாளை விடியும்பொழுது நல்லா பொழுதாக விடிய வேண்டும்' என்று வணங்கிவிட்டு படுத்து தூங்கி விட்டான்.

83

நாரதர் விவசாயின் செயல்பாடுகளை எல்லாம் கவனித்து விட்டு திருமாலிடம் சிரித்துக்கொண்டே சுவாமி தாங்கள் கூறியதை நினைத்து எனக்கு சிரிப்புத்தான் வருகிறது என்றார். அவன் தங்கள் திருநாமத்தை நாராயணா என்று காலையில் எழுந்தவுடன் ஒருமுறையும் இரவு

ஆன்மிகமலர்.காம்



e-magazine
aanmeegamalar.com
ஆன்மிகமலர் .காம் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

படுக்கப்போகும்போது நாராயணா என்று ஒரு முறையும் என இரண்டு முறைகள்தான் கூறினான். அவன் இரு முறைகள்தான் தங்கள் திருநாமத்தை உச்சரித்தான் என்று கூறி நாரதர் திருமாலை நோக்கி ஏளனச் சிரிப்புடன் பார்த்தார். நான் சதாகாலமும் நாராயணா என்று தங்கள் திருநாமத்துடன் திரிலோகம் முழுதும் சுற்றிக்கொண்டு வருகிறேன் என்று நாரதர் கூறினார்.

திருமால் எண்ணெய் நிரம்பிய ஒரு சிறு கிண்ணத்தை நாரதரிடம் கொடுத்து நாரதரே இந்தக் கிண்ணத்தில் உள்ள எண்ணெய் சிந்தாமல் மூன்று உலகமும் நீ சுற்றி வரவேண்டும். அதன் பிறகு நீ கேட்ட கேள்விக்கு நான் விளக்கமாக பதில் அளிக்கிறேன் என்று கூறி அனுப்பினார். நாரதர் எண்ணெய் நிரம்பிய கிண்ணத்துடன் முதலில் பிரம்மலோகம் சென்றார். அவர் கவனம் முழுதும் எண்ணெய் நிரம்பிய கிண்ணத்திலே இருந்தது. அவர் வைகுண்ட லோகம் செல்லும்போது திருமால் 'நாரதரே' என்று அருகில் சென்று அழைத்தார். அவர் அழைத்ததைக்கூட நாரதர் கவனிக்காமல் கிண்ணத்தில் உள்ள எண்ணெய் சிந்தி விடக்கூடாது என்பதிலயே அவர் கவனம் முழுவதும் இருந்தது. சுவாமி தாங்கள் கூறியபடி கிண்ணத்தில் உள்ள எண்ணெய் சிந்தாமல் மூன்று உலகமும் சுற்றி வந்து விட்டேன் என்று நாரதர் மகிழ்ச்சியுடன் கூறினார்.

திருமால் புன்னகையுடன் நாரதரிடம் நாரதரே இன்று நீ எத்தனை முறை என்னோட திருநாமத்தை உச்சரித்தாய் என்று கூற முடியுமா? என்று கேட்டார். சுவாமி தாங்கள் என்னிடம் எண்ணெய் நிரம்பிய கிண்ணத்தைக் கொடுத்து சிந்தாமல் மூன்று உலகமும் சுற்றி வரும்படி கூறியதால் என்னுடைய கவனம் முழுவதும் கிண்ணத்தில் இருந்தது. தங்கள் திருநாமத்தை எப்படி நினைக்க முடியும் அல்லது உச்சரிக்கத்தான் முடியுமா? என்று கூறினார். உன்னிடம் நான் எண்ணெய் நிரம்பிய ஒரு சிறு கிண்ணத்தின் பாரத்தைக் கொடுத்ததற்கே நீ என்னோட நாமத்தை உச்சரிக்க மறந்து விட்டாய்.

ஆனால் அந்த விவசாயி குடும்ப பாரத்தை எல்லாம் தாங்கிக்கொண்டு தன்னோட கடமைகளை செய்துகொண்டும் என்னை இரண்டு முறைகள் நினைத்தான். என்னோட திருநாமத்தை அதிகம் உச்சரித்துக்கொண்டு இருப்பவன் நீயா அல்லது நாம் பார்த்த அந்த ஏழை விவசாயா என்று திருமால் சிரித்துக்கொண்டே கேட்டார். அதனைக் கேட்ட நாரதர்

வெட்கித் தலை குனிந்தார். இதிலிருந்து நாம் இறைவன் மீது பக்தி செலுத்துவதிலும் அகங்காரம் இருக்கக்கூடாது என்பதை புரிந்துகொள்ளலாம்.



மனிதன் தனக்கு வரும் துன்பங்களை பற்றி நினைத்து கவலைப்படுவதால் நேரம் வீணாகிறது. உடல் ஆரோக்கியம், உள்ளத்தின் அமைதியும் கெடுகிறது. எனவே பிரச்சனைக்கு தீர்வு காணும் நோக்கில் ஆக்கபூர்வமான ஆன்மீக வழியில் சிந்திக்க வேண்டும். நம் எண்ணத்தைப் பொறுத்தே நம் வாழ்வில் நமக்கான சூழ்நிலைகள் உருவாகும் என்றும் நமது மனம் நல்லதை மட்டும் எண்ணிக்கொண்டிருந்தால், நம் கண்ணில் காணும் தீமையில்கூட நன்மைகள் வெளிப்படத் தொடங்கும். மனக்கட்டுப்பாடு இருந்தால் வாழ்வில் எதையும் சாதிக்க முடியும் என்று பரமஹம்ச யோகானந்தர் என்பவர் எளிய ஆன்மிக வழியினை கூறியுள்ளார்.

மனிதன் பணம் இருந்தால் வசதியாக மனம் நிம்மதியுடன் இருக்கலாம் என்று நினைத்துக்கொண்டு இருக்கிறான். அளவுக்கு மீறிய பணமும் ஆடம்பர வாழ்க்கையும் அதிகாரத்தைப் பெறும் ஆசையை ஏற்படுத்துகிறது. மேலும் மற்றவர்களின் துன்பங்களுக்கு இரங்காத சூழ்நிலைக்கு மனிதனை அது தள்ளி விடுகிறது என்று யோகானந்தர் கூறியுள்ளார். அதாவது அளவுக்கு மீறிய பணமும் ஆடம்பர வாழ்க்கையும் வாழ்பவர்களிடம் மனிதநேயம் என்பது இருப்பதில்லை. பெரும்பாலும் ஆன்மிக வழியில் செல்லும் மனிதர்களிடம்தான் மனிதநேயத்தைக் காணலாம். கடவுளைப் பொறுத்தவரையில் ரகசியம் என்பதே கிடையாது. அனைத்துச் செயல்களும் அவரின் ஆணையால்தான் நடக்கிறது என்று மன அமைதியுடன் வாழ்வதற்கு ஷீரடி சாய்பாபா கூறியுள்ளார்.

இதனை நாம் மனதில் வைத்து சிந்தித்து செயல்பட்டால் நமக்கு வரக்கூடிய துன்பங்களை எல்லாம் நாம் நினைத்து வருந்தமாட்டோம். நமது மனதை பக்குவநிலைக்கு கொண்டு வருவதற்கு நமக்கு வரக்கூடிய துன்பங்கள் அனைத்தும் கடவுளால் அனுப்பப்பட்ட வரப்பிரசாதம் என்று நினைத்துக் கொள்ள வேண்டும். என்ன நடந்தாலும் அதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள். இன்பம், துன்பம் எது வந்தாலும் மன அமைதியை மட்டும் இழந்து விடாதே. உலகில் ஆன்மிகம் ஒன்றே உண்மையான இன்பம் தரக்கூடியது மற்ற இன்பங்கள் எல்லாம் போலியானவை. அதாவது மற்ற இன்பங்கள் நிரந்தரமானவை அல்ல. சில நேரங்களில் இன்பத்தை விட துன்பமே சிறந்த ஆசிரியராக இருந்து மனிதனின் நல்வாழ்வுக்கு வழி காட்டுகிறது என்று சுவாமி விவேகானந்தர் நாம் மனபக்குவம் அடைவதற்கு எளியமுறையில் ஆன்மிக வழியில் வழி காட்டுகிறார். அவ்வாறு ஆன்மிக வழியில் எண்ணி செயல்படும்போது நாம் தேடும் விரும்பும் அமைதி நம்மையறியாமல் வந்து சேரும்.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

– அமைதி தொடரும்

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி:
9894043308

e-magazine
aanmeegamalar.com

# மாகாளய அமாவாசையைவிட பித்ருக்கள் திதியே உகந்தது

மகாளய அமாவாசையைவிட முக்கிய பங்கு வகிப்பது தாங்கள் தாய் தந்தை காலமான திதி தான் என்பது பலருக்கு தெரிவதில்லை தங்கள் புரோகிதரிடம் சென்று தந்தை காலமான திதி தெரிந்து கொண்டு அன்றைய தினத்தில் திதி சிராார்த்தம் செய்வதே உத்தமம் ஆகும்

இந்த வருடம் ஸ்ரீ குரோதி வருடம் புரட்டாசி மாதம் 02ந் தேதி (18.09.2024) புதன்கிழமை முதல் மகாளய பட்சம் ஆரம்பம் உங்களுடைய தாய் தந்தையர் எந்த திதியில் காலமானார்கள் என்பதை தெரிந்து கொண்டு மகாளய பக்ஷம் காலத்தில் அந்த திதி அன்று நம்முடைய முன் னோர்களுக்கு மகாளய திதி சிராார்த்தம் கொடுக்க வேண்டும்

ஆன்மிகமலர் .காம்

இந்த வருடம் 18.09.2024 புதன்கிழமை முதல் மகாளய பக்ஷம் ஆரம்பித்து 02.10.2024 புதன்கிழமை அமாவாசை அன்று முடிவடைகிறது

பெற்ற மகன்கள் கொடுக்கும் தில தர்பனத் தாலும் திதி சிராார்தத்தாலும் மட்டுமே பித்ரு தேவதைகள் திருப்தி அடைவார்கள்

எந்த கோவிலிலும், எந்த விதமான பூஜையா லும் பித்ரு தேவதைகள் திருப்தி அடைவது இல்லை பெற்ற மகன்கள் இருந்து திதி சிராார்தம் செய்யாமல் கோவிலில் செய்யும் பூஜைகளால் தெய்வங்கள் திருப்தி அடையாது என வேத புராணங்கள் கூறுகின்றன

ஆகையால் உங்களுடைய தாய், தந்தையர்க்கு நீங்களே தான் திதிசிராார்தம், திலதர்பணம், பிண்டபிரதானம் செய்து பித்ரு தேவதைகள் ஆசி பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மகாளய பட்ச காலமான 15 நாட்களில் எந் தெந்த நாளில் திதி சிராார்த்தம் தில தர்ப்பணம் பிண்டபிரதானம் செய்தால் என்ன என்ன பலன் கிடைக்கும் என்று பார்க்கலாம்.

1. பிரதமை: செல்வம் பெருகும்
2. துவிதியை: வாரிசு வளர்ச்சி (வம்ச விருத்தி)
3. திருதியை: திருப்திகரமான இல்வாழ்க்கை அமையும்.



4. சதுர்த்தி: பகை விலகும் (எதிரிகள் தொல் லை நீங்கும்)
5. பஞ்சமி: விரும்பிய பொருள் சேரும் (ஸம் பத்து விருத்தி)
6. சஷ்டி: தெய்வீகத் தன்மை ஓங்கும் (மற்றவர் மதிப்பர்)
7. சப்தமி: மேல் உலகத்தினர் ஆசி
8. அஷ்டமி: நல்லறிவு வளரும்.
9. நவமி: ஏழுபிறவிக்கும் நல்ல வாழ்க்கைத் துணை
10. தசமி: தடைகள் நீங்கி விருப்பங்கள் நிறைவேறும்.
11. ஏகாதசி: வேதவித்யை, கல்வி, கலைகளில் சிறக்கலாம்.
12. துவாதசி: தங்கம்,வைர ஆபரணம் சேரும்.
13. திரயோதசி: நல்ல குழந்தைகள், கால்நடைச் செல்வம், நீண்ட ஆயுள் கிட்டும்.
14. சதுர்த்தசி: முழுமையான இல்லறம் கணவன் மனைவி ஒற்றுமை ஏற்படும்.
15. அமாவாசை: மூதாதையர், ரிஷிகள், தேவர் களின் ஆசி கிட்டும்.

பித்ரு தோஷத்தினால் அவதிப்படுபவர்கள் இந்த மஹாளய பக்ஷ புண்ணிய காலத்தில் பித்ருதேவதைகளுக்கு திதி சிராார்த்தம் தில தர்ப் பணம் பிண்டபிரதானம் செய்து முன்னோர்கள் ஆசியை பெற்றுக்கொள்ளுங்கள்.

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / E-mail: aanmeegamalar@gmail.com



சத்துமாவு
Sathu maavu
41 வகையான
சிறுதானியங்களில்
தயாரிக்கப்பட்டது
41
ingredients
Sathu
maavu kanji
Multigrain
Porridge is the most
healthy breakfast.
It is rich in miner-
als and has high fibre
content that keeps blood
sugar under control.
ingredients
Ragi, Samba wheat, Rye, White corn, Black gram, Green gram, Millet, Black cowni rice, Sorghum, Bamboo rice, White chickpeas Black chickpeas, Roasted groundnuts, White soybeans, Horsetail rice, Millet rice, Varaku rice, Samai rice, White Ellur, Black rice, White Awal Sukku, Cucumber seed, Pumpkin seed, Barley, Groom samba, Cashew nut, Almond nut, Walnut, Double beans, Maize, Cardamom, Red Rice, Pistachio Nut, Edible Rice, Biryani Rice, Red Soya Beans, Gatti Elephant Rice, Unity Rice, Darbis Seed Hindu Salt,
மேற்கண்ட அனைத்தும் நன்கு பதப்படுத்தி, மிகுந்த தரத்துடன்
பக்கவிளைவுகளை தரும் கெமிக்கல் பயன்படுத்தாமல்
வீட்டு பயன்பாட்டு முறையில் தயாரிக்கப்பட்டது.
மேலும்
விபரங்களுக்கு
7550199561